# நான்

## உளவியல் மஞ்சரி



**தனிமை**

விலை: 4/-

புரட்டாதி — ஐப்பசி

1989

மலர்: 15 இதழ்: 5

சுகாதார முறையில்
உடல் சுகத்திற்கு அருமருந்தாகவும்
உங்கள் விருந்தினரை மகிழ்விக்கவும்,
அருந்த உகந்தது

## தோலகட்டி தயாரிப்புக்கள்

★ நெல்லிரசம் ★ முந்திரிகைரசம் ★ மாதுளைரசம்
★ நன்னாரிரசம் ★ ஊறுகாய் ★ குருதைலம்
செபமாலை, புனிதர்களின் வரவணிக்கங்கள்,
'நான்' வெளியீடுகள்.

இன்னும் பல பொருட்களை நீங்கள் யாழ் நகரிலேயே தடையின்றி பெறுவதற்கு ஓர் நிலையம் கீழ்க்காணும் முகவரியில் ஆரம்பித்துள்ளது.

**உண்மையான அசல் தோலகட்டி தயாரிப்புக்களைப் பெற இன்றே நாடுங்கள்**

தோலகட்டி விற்பனை நிலையம்
37, கோவில் வீதி,
[ஆஸ்பத்திரி வீதி — கோவில் வீதி சந்தி]
யாழ்ப்பாணம்.

*இயக்குனர்:*

| | |
|---|---|
| செபமாலைதாசர் ஆச்சிரமம், | அருள் ஆச்சிரமம், |
| தோலகட்டி, | 5, ரெம்பிள் றோட், |
| வசாவிளான். | யாழ்ப்பாணம். |

# மாறுகின்ற மனிதன்......

இயற்கை விஞ்ஞானம் சார்பான விதிகள் சர்வவியாபகத் தன்மை உடையனவாகக் காணப்படுகின்றன. இடம் மாறினாலும் சரி, காலம் மாறினாலும் சரி குறிப்பிட்ட நிபந்தனைகள் நிறைவுபெறின் அவற்றை ஒத்த விளைவுகள் நிகழ்ந்தே ஆகின்றன. "என்னைப் புவியீர்ப்புவிதி எதுவும் செய்ய முடியாது" என்று கூறிக்கொண்டு பையன் ஒருவன் 40 அடி உயர மாடியிலிருந்து பாய்வானாயின் அவன் ஆபத்துக்குள்ளாவான் என்பதில் ஆச்சரியம் இல்லை.

ஆனால், மனிதன் — அவனது சிந்தனைகள், செயல்கள், உணர்ச்சிகள், மனநிலை — சார்பான எதிர்வு கூறல் எப்பொழுதும் சிக்கலானதே. அவன் இடத்துக்கு இடம், நிமிடத்திற்கு நிமிடம் மாறுபட்டே காணப்படுவான். பல சந்தர்ப்பங்களில் பலரோடு சேர்ந்து கலகலப்பாக நடமாடும் ஒருவன் சில சந்தர்ப்பங்களில் தனிமையை விரும்பியே நாடுவான். அது அச் சந்தர்ப்பத்தில் அவனது உளச் சமநிலைக்கு அவசியமான ஒன்றாக அமையலாம். எனவே, தனிமை என்பது முழுமையாக விரட்டியடிக்கப்படவேண்டிய ஒன்றல்ல. விரக்தியின் வெளிப்பாடாகக் காணப்படும் தனிமையே வேண்டப்படாதது. அதுவே அழிவின் ஆரம்பம். அதேவேளை, ஆழமான உறவிற்கு, அறிவார்ந்த ஆராய்விற்குத் துணை தருவது தனிமையேயாகும்.

ஒருவன் தன்னை முழுமையாக எடைபோடல், தனது முடிவுகளை முன்வைத்தல், வாழுதற்கான தீர்மானத்தை எடுத்தல், தனது ஆற்றல்களை இயல்பான முறையில் வெளிக்கொணருதல் போன்றவை சாத்தியமாவது தனிமையிலே என்றால் அது மிகையாகாது.

ஒருவன் தனிமையிலே,

— தன்னைத் தானாகவே காண்கிறான்.

— தனது ஆற்றல்களை இனம் காணுகின்றான்.

— தொடர்புகளின் தேவையை

உணர்ந்துகொள்கின்றான்.

— ஆசிரியர்.

## உள்ளே...

காதல்
ஓர் கண்ணோட்டம்
— சங்கரலட்சுமி

பெண்கள் பக்கம்
— ராஜன் மங்களா

தனிமையிலே இனிமை
காண முடியும்
— லோ. வ. இராயப்பு மா. ம. தி.

முதல்தர மாணவர்
மனோ நிலையும்
செயற்பாடுகளும்
— தி. ஞானிகாந்தன், வத்தளை.

தனிமை ஒரு நரகம்
— மொ. றெஜினு
— சிறுகதை

'நான்' கருத்தரங்குகள்

குடும்ப டொக்டர் பதில்

அழகியல் - ஓர் அறிமுகம்
— கலாநிதி சோ. கிருஷ்ணராஜா

கருத்துக் குவியல் 57

அடுத்து வெளிவருகிறது:
"அறியாமை"
உங்கள் ஆக்கங்களை உடன் எழுதி
அனுப்புங்கள்

ஆசிரியர்:
வின்சன்ற் பற்றிக் O. M. I, B. A

இணை ஆசிரியர்:
S. டேமியன் O. M. I. M. A.

துணை ஆசிரியர்:
ஜோசப் பாலா
ராஜன் மங்களா
றொபேட்
வினிபிரட்

தொடர்பு:
றெஜினல்ட்
செபநேசரத்தினம்

அமைப்பு:
அந்தோனிமுத்து
அல்றின்
ஜெறோம்
S. நியூமன்

வினியோகம்:
விமலருஜன்
ஸ்ரனி

பொருளாளர்:
ஜெயசிங்கம் O. M. I.

ஆலோசகர்:
B. இராயப்பு O. M I. S. T.D

தொடர்பிற்கு:
'நான்' ஆசிரியர்
வசந்தகம்,
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை.

தனிப்பிரதி: 4—00 ஆண்டுச் சந்தா: 25—00

# நீங்கள் உளமுதிர்ச்சி அடைந்தவரா?

— கோகிலா மகேந்திரன்

சூரியனைத் தொலைத்துவிட்ட வானத்திலிருந்து சூனிய இருள் பூமியின் மேற்பரப்பைக் கௌவியது.

நீங்கள் உங்கள் நண்பருடன் கதைத்துக் கொண்டிருக்கிறீர்கள். சம்பாஷணை ஏதோ ஒரு விடயத்தைத் தொட்டவுடன் விவாதமாகி இறுதியில் சர்ச்சையாகி விட்டது. உங்கள் நண்பரோ தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் தான் என்று நிற்கிறார். உங்களுக்கும் விட்டுக் கொடுக்க முடியவில்லை.

கொதி நிலை உயர்ந்தது.

"நான் கதைக்கிறது என்னவென்று எனக்குத் தெரியும். நீ வாயை மூடிக் கொண்டு எழும்பிப் போ ..." என்று கூறி அந்தச் சர்ச்சையைத் திடீரென முடிவுக்குக் கொண்டு வருவீர்களா?

✳ ✳ ✳ ✳

உங்கள் மனைவி, உங்கள் பிள்ளைகள், உங்கள் நண்பர்கள், உங்கள் வேலைத்தளத்தில் உங்களுக்குக் கீழ் பணி புரியும் ஊழியர்கள் ...... பொதுவாக மக்கள் எல்லாரும் ... எப்போதும் தவறாகவே நடந்து கொள்கிறார்கள். அவர்களுக்கு எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்று தெரியவில்லை. எங்கே எப்படிக் கதைக்க வேண்டும் என்று தெரியவில்லை. நீங்களே அடிக்கடி, "இப்படிச் செய், அப்படிச் செய்." என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அப்படித்தானே?

✳ ✳ ✳ ✳

அந்த நெரிந்த புருவங்களில் ஒரு போதும் சுளிப்பு மாறுவதில்லை. அந்த இருண்ட, வஞ்சகமான முகத்தைப் பார்க்கும் போதே மனதில் ஏதோ என்று விபரீதமாய்ப் புரிவது போலிருக்கும். சுருக்கமாய்ச் சொல்வதானால உங்களுக்கு அவரைப் பிடிக்கவே பிடிக்காது. உருட்டுச் சட்டிப் பொம்மை மாதிரித் தலையும் ஆளும்! சரி, இப்போது அவரோடு கதைக்க வேண்டியிருக்கிறது. உங்கள் மேலதிகாரி அவரோடு போய்க் கதைத்து அந்த விடயத்தைச் செய்யுமாறு கூறுகிறார்.

அவரோடு எந்தவிதமான தொடர்பும் கொள்வதற்கு நீங்கள் மறுத்து விடுவீர்களா?

* * * *

அழகிய ஓவியம் ஒன்று கறைபட்டுப் போனது போல, அந்த நட்பு முறிந்து விட்டது.

சீ ... எவ்வளவு நெருக்கமான நண்பனாக இருந்தான்! அவனது பிறந்த நாள் ஒவ்வொன்றுக்கும் நீங்கள் அவனுக்குப் பெறுமதியான பரிசுகள் கொடுத்திருக்கிறீர்கள். அந்தப் பரிசுகளுக்காகவாவது அவன் உங்களுக்கு நெருங்கிய நண்பனாய் இருந்திருக்க வேண்டும்.

அந்த இரகசியத்தை அவன் உங்களுக்குச் சொல்லவில்லை. நீங்கள் கொடுத்த அன்பளிப்புப் பொருட்கள் உங்களுக்குள் ஓர் அத்தியந்த நட்பை உருவாக்கும் என்று நீங்கள் எதிர்பார்த்தீர்கள்! அவன் உங்களுக்கு நன்றி உள்ளவனாக இருப்பான் என்று நினைத்தீர்கள்! எல்லாம் ஏமாற்ற மாகப் போய்விட்டது இல்லையா?

* * * *

உங்களது முகம் ஒரு சிலையின் முகம் போல உணர்ச்சியற்றிருக் கிறது.

நீங்கள் தவறு செய்து விட்டதாகவே எல்லாரும் சொல்கிறார்கள். எதிரொலி ஒன்றை எதிர் பார்த்துக் காத்திருக்கும் போது, மனச்சாட்சி யின் குரல் ஒலிப்பது போல, தனிமையில இருந்து சிந்தித்தால் ... நீங்கள் செய்து விட்டது பிழைதானே என்று தோன்றுகிறது.

உங்கள் அப்பா, அம்மா, சகோதரர்கள், நண்பர்கள் எல்லா ரும் நீங்கள் செய்தது பிழைதான் என்கிறார்கள். ஆனாலும், அது பிழைதான் என்பதைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்வது உங்களுக்கு மிக வும் கஷ்டமாக இருக்கிறது இல்லையா?

* * * *

உங்கள் கண்களில் கொப்பளித்துச் சுரந்த கண்ணீர்த் திரவத்தில் அந்தக் கடிதத்தின் எழுத்துக்கள் மறைந்து போகின்றன. நீங்கள் அவ ரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமாம்.

செய்யாத பிழைக்காக – உங்கள் மனச்சாட்சியின்படி – ஒருவரிடம் மன்னிப்புக் கேட்பது என்பது உங்களால் ஒரு போதும் முடியாது. சரிதானே?

* * * *

அந்த நாளை - அந்த நிகழ்ச்சியை – ஒரு சித்திரத் தொகுதியைப் புரட்டுவது போல், மனத்திரையில் காட்சி காட்சியாய்க் காணுகிறீர்கள். அதை இப்போது நினைத்தாலும், கண்கள் சிவந்து, நெஞ்சு விம்மி... கோபம் உச்சநிலைக்கு ஏறுகிறது.

ஏனோ தெரியவில்லை. இப்போதெல்லாம் உங்களுக்கு அடிக்கடி கோபம் வருகிறது உலகமே தலைகீழாக நடந்து கொண்டிருந்தால் கோபம் வரத்தானே செய்யும்? அலுவலகத்தில்தான் தலையிடி என்றால் வீட்டில் அதற்கு மேல்!

ஒரு பொருளும் வைத்தால் வைத்த இடத்தில் இல்லை. அந்தப் பொருள் அந்த இடத்தில் இல்லை என்றால் ... யாரையும் கேட்க மனம் வராது... உங்களுக்குச் சும்மா ஏறிக் கொண்டு வரும் கோபம் இல்லையா?

* * * *

உங்கள் மனைவி (அல்லது கணவர்) உங்களுக்குப் பொருத்தமாக அமையவே இல்லை. சிந்தனைகள், இலட்சியங்கள், உணவில் விருப்பு வெறுப்புகள், பொழுது போக்குகள், எல்லாம் எதிரும் புதிருமாய் இருக்கின்றன. நீங்கள் கோயிலுக்குப் போக நினைத்தால் அவள் சினிமா என்கிறாள். நீங்கள் ஒரு பொருளை வாங்க நினைத்தால் அவள் வேறு என்று வாங்கிவிடுகிறாள். உங்கள் நண்பரை அவளுக்குப் பிடிக்கவில்லை. அவளது தோழிகளைக் கண்டால் உங்களுக்கு எரிச்சல்தான் வருகிறது. நீங்கள் விரும்பித் தேர்நதெடுக்கும் நிறங்களை அவள் தூக்கி எறிந்து விடுகிறாள்.

எல்லையும் முடிவுமற்ற இந்தக் குழப்பத்தில் சிக்கிச் சீர்குலைந்து, அழிந்து கரைந்து போவதுதான் முடிவா?

நீங்கள் மட்டும் இன்னொருவரை மணந்திருந்தால் ... எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும் இல்லையா?

* * * *

அவளுக்கு உங்களை நன்றாகவே தெரியும். உங்கள் பெயர் கூடத் தெரியும். ஒருநாள் உங்களோடு நீண்ட நேரம் கதைத்தவர், இப்போது

5 நான்

வழியில் உங்களைக் கடந்து செல்லும் போது ... நின்று சிரித்துக் கதைப் பார் என்று எதிர் பார்த்தீர்கள்.

அவர் சிரிக்கவே இல்லை. ஏன்?

ஆழ்ந்த மௌனத்தில் அவர் தலை குனிந்திருக்கிறது! நீங்களாகச் சிரித்து நிறுத்தி "என்ன மறந்து விட்டீர்கள்?" என்று கேட்டீர்கள். அவர் விழியைப் புரட்டுகிறார். உங்களை அவருக்குத் தெரியவே இல்லை.

உங்களுக்குப் பெரிய எமாற்றமும் கவலையுமாகப் போய் விட்டது. ஏன் கேட்டோம் என்றாகி விட்டது இல்லையா?

☀ ☀ ☀ ☀

இன்றைக்கு ஒரு விருந்துக்குப் போகிறீர்கள். நாளை ஒரு திருவிழா வுக்குப போகப் போறீர்கள். அடுத்த வாரம் ஒரு கூட்டம் இருக்கிறது.

எங்கு போனாலும் அங்கே எல்லோருடைய கவனத்தையும் ஈர்ப்பவ ராக நீங்களே இருக்க வேண்டும் என்பதில் நீங்கள் தனி அக்கறை எடுத்துக் கொள்வீர்களா?

☀ ☀ ☀ ☀

மேலே தரப்பட்ட கேள்விகளுக்கு நீங்கள் "ஆம்" என்று சொல்லி வந்த ஒவ்வொரு முறையும் உங்களுக்குப் போதிய உளமுதிர்ச்சி ஏற்பட வில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

"இல்லை" என்று நீங்கள் பதில் சொன்ன ஒவ்வொரு இடமும் உங் கள் உளமுதிர்ச்சிக்கு ஒவ்வொரு பிளஸ் பொயின்ற் ஆக இருக்கும். ●

---

## உங்களுக்குத் தெரியுமா?

- ☐ துருவப் பகுதிகளில் உள்ள பனிக்கட்டிகள் உருகியதன் காரணமாக, சென்ற 19-ம் நூற்றாண்டை விட இந்நூற்றாண்டு கடல்மட்டம் 5' ஆக உயர்ந்துள்ளது.
- ☐ தற்போது செயற்கை செவி பொருத்துவது வெற்றிகரமாக முடிந் துள்ளது, இது அவுஸ்திரேலியாவில் ஜப்பானிய பெண்மணிக்கு நடைபெற்றது.
- ☐ ஆபிரிக்காவில் தலைசிறந்த உணவு "எறும்பு வறுவல்" எண்ணைக் கலப்பில்லாமல் பொரித்து அரிசிச் சோற்றோடு தருவார்களாம்.
- ☐ மறைந்த மாவீரன் அலெக்ஸ்சாண்டருக்கு ஒரு கண் நீலநிறம். மற்றையது கறுப்பு.

தகவல் : பத்மா, யாழ்ப்பாணம்.

# காதல் - ஓர் கண்ணோட்டம்

— சங்கரலட்சுமி
கரவெட்டி.

"காதல் என்பது என்ன? இவ்வுலகம் இச் சொல்லைவைத்துக் கொண்டு ஏன் அல்லலப்படுகிறது? கவிஞர்களும், மதவாதிகளும், தத்துவஞானிகளும், மாறி மாறி இதற்கு விளக்கம் கொடுப்பானேன்? உண்மையில் காதல் என்பது என்ன?

நமக்கு முன்னே சென்றவர்கள் மூலம் நாம் இதுபற்றி அறிந்ததை மறந்துவிட்டு, நாம் இதுபற்றி புதிதாய், முழுமையாய், தெளிவாய் அக்கறையுடன் யோசிப்போம்.

காதல் இயல்பாய் பொங்கும் உணர்ச்சியா? ஒரு காலகட்டத்தின் நிர்ப்பந்தமா? தனது வேதனையை பொறுத்துக் கொண்டு பிறருக்குச் செய்யும் தியாகமா? ஆக்கிரமித்தலா...? அடிபணிவதா...? கவர்ந்து போவதா...? விலை பொருளா...? பண்டமாற்றா...?

மேன்மையுள்ள மனிதவர்க்கமே காதல் என்பது என்ன?

"காதல் என்பது விட்டுக்கொடுத்தல் பரஸ்பரம் சடடென்றுவிட்டுக் கொடுத்தல் எந்தவித எதிர்பார்ப்புகளுமின்றி இருவர் ஒரே நேரத்தில் இயல்பாய் விட்டுக்கொடுத்தல், நேசித்தல்".

நேசம் வளைத்துப் போடுமா? விலைபேசுமா? மண்டியிடுமா? இவைகள் வன்முறையல்லவா? வன்முறையில் காதல் மலருமா? காதலை வன்முறைதான் வளர்க்குமானால் அது காதல்தானா?

பிறரை தன்னிடத்திற்கு வளைப்பது காதலாகாது. பிறர்சுமையை தான் தாங்கி, தனனை நொந்து கொள்வது காதலாகாது. நீ இதைக் கொடு, நான் அதைக் கொடுக்கிறேன் என்பதும் காதலாகாது.

1. "காதல் பாசமாக வளர்கிறது, கடமையாக மலர்கிறது, தியாகமாகவும் கனிகிறது. துன்பத்தில் இன்பம் காணவும், மரணபயத்தை மறக்கச் செய்யவும், வறுமையை எதிர்த்துப் போராடவும் அது சக்தி தருகிறது"

2. "நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேசவேண்டும்
நான் காணும் உலகங்கள் நீ காண வேண்டும்
நீ காணும் பொருள் யாவும் நானாக வேண்டும்"
[கண்ணதாசன் நூல்களிலிருந்து]

"காதல், காதல், காதல்
காதல் அன்றேல், காதல் அன்றேல்
சாதல், சாதல், சாதல்" 7 நான்

"காதலன் ஒருவனைக் கைப்பிடித்து - அவன்
காரியம் யாவிலும் கை கொடுத்து
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வோமடி"

(பாரதியார் பாடல்கள்)

3) காதல் ஆணையும், பெண்ணையும் சிக்க வைக்கும் சிலந்திவலை.

4) பெண்ணே! நிலைகொள்ளாத படபடத்துடனும், மௌனத்துடனும் உன்னருகில் இருப்பவன்தான் உன்னை உண்மையாகக் காதலிக்கிறன் என்பதை உணர்ந்துகொள்.

5) எந்த ஒரு மனிதனுக்கும் எந்த விதத்திலும் பலவீனம் வந்து விடக்கூடாது. அப்படி வந்து விட்டால், அதில் ஒன்றே ஒன்றுதான் உயர்வானது அது காதல்.

6) எந்தப் பெண்ணை நீ மனப்பூர்வமாகக் காதலிக்கிருயோ, அவள் என்றும் உன் கண்களுக்கு கன்னியாகவே காட்சி அளிப்பாள்.

7) காதல் என்ருல் என்ன? அஃது அழிக்கக்கூடியதுமல்ல, அழிவற்றதுமல்ல, இரண்டிற்கும் இடைப்பட்ட ஏதோவொன்று அது மாபெரும் உயிர்ப்பாகும். அது தெய்வீகத்திற்கும், மனிதத்துவத்திற்கும் இடையிலிருந்து பிணைக்கும் ஒரு மாபெரும் உயிர்ப்புதான் காதல்.

8) காதல் உணர்வுகள் தடையெதுவும் இல்லாதபோது, குளத்துநீர் போன்றிருக்கும். தடை பெருகப் பெருக கொத்தளிக்கும் கடலாகவே அவை ஆகும்.

9) ஊனையும், உணர்வையும், உயிரையும் தாண்டி அப்பால் செல்லும் தூய அன்பே காதல்.

10) காதல் அறிவை விடவும் உயர்வானது. செல்வங்களைவிட அபூர்வமானது. நெருப்பால் தகிக்கமுடியாது நீரால் தணிக்க முடியாது.

11) உண்மைக் காதல் உயர்ந்த உள்ளத்தைப் புனிதமாக்கும்; இதயத்தை விரிவுபடுத்தும்; அத்தோடு பகுத்தறியும் மனப்பான்மையும் அதற்குண்டு.

12) காதலற்ற பாலுறவு விபச்சாரத்திற்குச் சமமானது, காதலர்கள், இழப்பதனுல் பெறுபவர்கள், பரிமாறுவதால் பயனுறுபவர்கள், கண்ணீரால் புன்னகைப்பவர்கள், காயங்களை பூக்களாக சூடிக் கொள்பவர்கள். [பல அறிஞர் கருத்துக்கள்]

# கொஞ்சம் பேசுங்கள்...

பெண்கள் பக்கம்

பெண்கள் பக்கம் | தொகுப்பு:-
ராஜன் மங்களா | பெண்கள் பக்கம்

பெண்கள் பக்கம்

எதையுமே நேரமெடுத்து செவி சாய்க்காத ஒரு கூட்டம் நிறைந்த உலகத்திற்குள் நாம் நுழைந்துகொண்டிருக்கிறோம். ஆனால் நம்மைச் சுற்றிலும் நாம் செவி சாய்க்க வேண்டிய மிக முக்கியமான காரியங்கள் காத்துக் கிடக்கின்றன. நம்மைச் சுற்றிலும் நாம் காண்பது என்ன? ஏக்கப் பெருமூச்சுக்கள், கண்ணீர் வடிந்து காய்ந்து போன கன்னங்கள், ஆறுதலுக்காக ஏங்கும் நெஞ்சங்கள், இவர்களது கண்ணீர் சொல்லும் கதைகளைக் கேட்க நமக்கு நேரமில்லை. ஆனால் நாம் விடாமல் பேசிக்கொண்டிருக்கிறோம்.

நம்மைப்பற்றிய நிச்சயம் நமக்கு தெரியாது. நமக்கு எல்லாம் தெரியும் என்பதை நிரூபித்துக் காட்ட சிறந்த வழி பேசுவதுதான் என்று எண்ணிப் பேசுகிறோம். அற்ப காரியங்களை கூட மீண்டும் மீண்டும் பேசுகிறோம். இன்னொருவரது தேவை நமது தேவையை விட மிக முக்கியமானது என்பதை உணராமல் பேசுகிறோம் இதனால் மற்றவர்களைப் புரிந்துகொண்டு அவர்களிடமிருந்து புதிய காரியங்களைக் கற்று அவர்களது அனுபவங்களை நமதாக்கிக்கொள்ளத் தக்கதான பொன்னான சந்தர்ப்பங்களை நழுவ விடுகிறோம். நன்கு செவிசாய்ப்பவரே இன்றைய உலகில் மாபெரும் தேவை. உண்மையான செவி சாய்த்தல் துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் நபரை தூக்கி நிறுத்தும் மருந்தாகவும் பயன்படலாம். இந்த மானிட உறவு அன்பளிப்பாகக்கூட பரிணமிக்கலாம். தாழ்வு மனப்பான்மையால் தனித்திருந்து தத்தளிக்கும் நபருக்கு அருகிலமர்ந்து செவிமடுப்பீர்களானால் சுய மதிப்பையும், சுய மரியாதையையும் அவர்களில் கூட்டுவிக்கலாம். நன்கு செவிமடுப்பவர்கள் உண்மையிலே தன்னலமற்றவர்கள். அவர்கள் எவ்வளவு நேரமானாலும் தங்களை மறந்து மற்றவர்களுக்கு செவி சாய்க்க முடியும். விஷேசமாக பெண்கள் வீட்டிலே வயது முதிர்ந்தவர்கள் சொல்வதை ஆறுதலாக

## தலைமுடி உதிர்கிறதா?

ஓர் எலும்பிச்சம் பழத்தின் சாற்றை எடுத்து நாலு டீஸ்பூன் அளவுள்ள தேங்காய்ப் பாலுடன் கலக்கவும். இதை தலைமுடியில் நன்றாகத் தேய்த்து ஒரு மணி நேரம் ஊறவிட்டு பிறகு குளிக்கவும். வாரத்தில் ஒரு முறை செய்தால் தலைமுடி உதிர்வது நிற்கும்.

கேட்கமாட்டார்கள். என் குழந்தைகள் கூறுவதைக் கேட்க கூட அவர்களுக்கு நேரமில்லை கணவனுக்கும் அந்தக் கதிதான். எதையும் செவி மடுக்கும் பழக்கம் எமமிடை அருகி விட்டது. மற்றவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்புகொடுக்கும் பரிதாபகரமான நிலை தான் இது. பெண்களாகிய நாமும் இப்படி என்றால் யார் தான் மற்றவர்களுக்கு ஆறுதலளிப்பார்கள்.

நாவை மட்டும் நம் பெண்களுக்கு அடக்கத் தெரியாது நாம் பேசும் வார்த்தைகளில் எந்தவிதமான தவறும் இல்லாதிருக்குமானால் நமது வாழ்வு நிச்சயமாகவே பூரணத்துவத்தை அடையும். நாலு பெண்கள் ஒரு இடத்தில் கூடினால் அங்கு என்ன பேசுவார்கள் என்பது உங்களுக்குத் தெரியும் தானே. ஒருவருடத்தில் கேட்டதை பலரிடத்தில் போய் சொல்லி கலகங்களை மூட்டி நண்பர்களைப் பிரித்து பிரச்சனைகளை யுண்டாக்கும் நம் செயல்கள் எதற்காக?

பெண்களே! நமது அன்பற்ற வார்த்தைகள் கேட்பவர்களை உறைய செய்கிறது. நமது சூடான வார்த்தைகள் மற்றவர்களை சுட்டு பொசுக்கி விடுகின்றன. நமது கசப்பான வார்த்தைகள் மற்றவர்களது வாழ்வில் கசப்பை ஏற்படுத்துகின்றன. நமது கோபமான வார்த்தைகள் மற்றவர்களைக் கொதிக்கச் செய்கின்றன.

அன்பு நிறைந்தகருணை நிறைந்த வார்த்தைகளைப் பேசுவோம். நம்பிக்கையும் மகிழ்ச்சியும் பொங்கி வழியும் வார்த்தைகளைக் கூறுவோம்.

காதைத் திறந்து நாவை அடக்கி வாழ்வோம் மங்கையரே.

## சிந்தனைத் துளிகள்:

தொகுப்பு:-

கார்த்திகா — கரவெட்டி.

- நம் குறைபாடுகளையும் பொருட்படுத்தாது, நம்மிடம் அன்பு காட்டப்படுகின்றது என்ற நம்பிக்கை இன்பங்களில் மிக உன்னதமான இன்பம்.

விக்ரர் ஹியூகோ

- சந்தர்ப்பங்களுக்காக நான் காத்திருப்பதில்லை; சந்தர்ப்பங்களை நான் உருவாக்குகின்றேன்.

பெர்னட்ஷா

# த மை
# னி

**(உண்மை நிகழ்வு)**

**வே**லியா? சிறையா? தவமா? வேலி என்றால் தாண்டிவிடு. சிறையா உடைத்துவிடு. தவமா கலைத்துவிடு. இல்லையானால் அது உன்னையே அழித்துவிடும்.

சித்திரா சித்திரத்தில் எழுதிப் பார்க்கவேண்டிய பெண்ணோவியம் குடும்பத்தில் மூத்த பெண்! கடமைக்கும் பொறுப்புக்கும் அவளை ஆண் மகளாகவே காட்டியது. எல்லாப் பொறுப்புக்களையும் முடித்து சற்றே மூச்சுவிட்டு தலை நிமிர்ந்த போது, கூந்தலில் கண்சிமிட்டிய சில வெள்ளை முடிகள் நாங்களும் எங்கள் கடமைகளைச் செய்கிறோம் எனக்கூறாமல் கூறின! சகோதரர்களுக்கோ தங்கள் குடும்பம் தங்கள் பிரச்சனைகள், தாய் தந்தையருக்கோ தங்கள் வயோதிபம், காலப் போக்கில் தன் தனிமையை தாங்க முடியவில்லை சித்திராவால். அப்பாவிப் பேராசிரியையான சித்திரா, தன்னுடன் பணிபுரியும் பேராசிரியர் ரகுமானுடன் நெருங்கிப் பழக வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. நாளடைவில் இருவரும் மனம் விட்டுப் பேசி தங்கள் கருத்துக்களை பரிமாற்றம் செய்து கொண்டனர். ஐம்பது வயதான ரகுமான் மனைவியை இழந்தவர். ஒரே மகன் அமெரிக்காவில் குடியேறிவிட்டான். தந்தையின் தொடர்பை மாதம் ஒரு அன்பான கடிதத்துடன் முடித்துக் கொள்வான். இந்நிலையில் சித்திராவும் ரகுமானும் தனிமைச் சிறையில் இருந்து வெளிவந்து இருவரும் கணவன் மனைவியாக இணைய முடிவெடுத்து சகோதரர்களுக்கு அறிவிக்கிறாள் சித்திரா உடனே எல்லோரும் வந்துவிட்டனர். திருமணத்தை நடத்த அல்ல அதை நிறுத்த இவ்வளவு காலத்தின் பின் திருமண ஆசையா, உடல் ஆசையா வெட்கமாக இல்லை? இவற்றை எல்லாம் மீறிக்கொண்டு மணம் புரியும் மனப்போக்கு துணிச்சல் பாவம் சித்திராவுக்கு இல்லை. தன் ஆசையை அழித்துவிட்டாள். தங்கள் சாதிய பெருமை காப்பாற்றப்பட்ட நிம்மதியில் அவர்கள் போகிறார்கள். போகும்போது என் பெண்ணை, என் பிள்ளையை தத்தெடுத்துக்கொள். தனிமை தோன்றாது. உன சொத்துக்களும் நம் குடும்பத்திலே இருக்கும்.

இப்படி சில இலவச ஆலோசனைகள், என்னே சுயநலம்! யாருக்காக வாழ்கிறாள்? எதற்காக?

எந்தவித பிடிப்பும் இன்றி மறுபடி இயந்திர வாழ்க்கை! அந்த அன்பான சித்திரா, ஆற்றல்கள் நிறைந்த சித்திரா, இன்று எதற்கும் எரிந்துவிழுபவளாக தன்னையும் அழித்து மற்றவர்களுக்கும் பிரயோசனமற்று வாழ்கிறுள். குலுங்கி குலுங்கி குமுறி அழும் இக் குழந்தை மனப் பெண்ணை தேற்றும் வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருக்கிறேன் நான். ●

---

# மாதமும் நீ மலர்ந்திட்டால்

— மானிலா

என் இனிய "நாணே"
எனை நீயும் அறியாயோ
அன்பென்றல் எதுவென — நீ
அறியாதவர்க் குரைத்திட்டாய்.

அறிவென்னும் ஒளியதனை
அயராது அளித்திடும் — நீ
அழியாத சின்னமாக
அவனியிலே நிகழ்ந்திடுவாய்.

மறைந்திருக்கும் மாண்புதனை
மானிடர்க்கு ஊட்டி நீயும்
மறுமலர்ச்சி தனைக்காண
மனிதரிடை மலர்கின்றுய்.

நெஞ்சமெல்லாம் நிறைந்து — நீயும்
நெஜமாக்கு கனவுகளை
மறுமலர்ச்சி உண்டு இங்கு
மாதமும் நீ மலர்ந்திட்டால். ●

# இருட்டுமுன்னே ஏதாவது செய்திடுவோம்

அடம்பன் — பாக்கியம்

சுவைக்காக ஊறுகாயைச் சேர்த்துக் கொள்வோம்
ஊறுகாயே சோறாக உண்ணவேண்டாம்
அவைக் குதவா கதையாலே இலாபமென்ன?
அணை போடா கங்கையாலே அழிவே தானே!
புகைக்குள்ளே இருந்து வீணே கண் புழுங்கி
பெண்ணினத்தைச் சாடவேண்டாம் – சடவு வேண்டாம்
குகைக்குள்ளே இருந்து கொஞ்சம் வெளியே வருவோம்
கொசுத் தேனி போலிங்கே புதுமை செய்வோம்.

விடிந்து விட்ட பொழுதுதனை வீணாக்காமல் – மீண்டும்
இருட்டு முன்னே ஏதாவது செய்திடுவோம்.
ஒடிந்து போன உள்ளங்களைச் சொரிந்து கொடுத்து
ஒப்பாரி வைக்கும் பணி எமக்கு வேண்டாம்.
முடிந்த வரை நெம்பு கோலாய் நிமிர்ந்து நின்று
நெஞ்சாரப் பணி செய்வோம்! அஞ்சாது செய்வோம்!
இடிந்த சுவர்க் கழுதைகளாய் இனியுமிங்கே
இருக்க வேண்டாம் எழுந்து வாரீர்! பணிபுரிவோம்!

சாதிக்க எத்தனையோ இங்குண்டு — வழியில்
சந்திக்க எத்தனையோ சறுக்கல் உண்டு.
வாதிக்க எத்தனையோ விடயமுண்டு — சுழியோடிப்
பார்த்திடவே சுற்றிவரக் கடலுமுண்டு
பூமிக்குள் எத்தனையோ புதையல் உண்டு
புதுமை செய்ய நிச்சயமாய் நிறைய உண்டு
நாமினிமேல் ஓய்ந்து நின்றால் நண்பர்களே!
நாய் கூட நம் பிணத்தைத் தின்றிடுமே!

# முதல்தர மாணவர் மனோநிலைகளும் செயற்பாடுகளும்

— தி. துதிகாந்தன், வத்தளை.

பாடசாலை வகுப்பொன்றின் மாணவர்கள் முதல்தர, நடுத்தர, கடைத்தர மாணவர்களாக மூன்று வகையாக தர அடிப்படையில் கணிக்கப்படுகிறார்கள்.

பொதுவாக பரீட்சைகளில் அதிகூடிய பெறுபேறுகளையும், ஆசிரியர்கள் மத்தியில் நல்ல பெயரையும் பெறுகின்ற மாணவர் கூட்டத்தினர் முதல்தர மாணவர்களாகவும், ஓரளவிற்கு பெறுபேறுகளைப் பெற முயலுவோர் இடை நிலையிலும், பாடங்களில் கவனமின்றியும், பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெறாதவர்களாகவும், தமது செயற்பாடுகளின் மூலம் ஆசிரியரைக் கோபமூட்டும தன்மையையும் கொண்டவர்கள் இறுதி நிலை மாணவர்களாகவும் நோக்கப்படுகின்றனர்.

பொதுவாக முதற் தர மாணவர்களது செயற்பாடுகளில் ஆறு இயல்புகள் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

## 1. தமது பெறுபேற்றை உறுதிப்படுத்த முயலுதல்:-

தாம் முதல்தர மாணவராக இருப்பதால் பல சலுகைகளை அனுபவிப்பதாகக் கருதிக்கொண்டு தமது நிலையை உறுதிப்படுத்தத் தாமாகவே உந்தப்படுவர். இதற்காக இவர்கள் தாமாகவே படிப்பில் ஆர்வம் எடுப்பதோடு, எப்போதும் தமது பரீட்சைகளில் கூடிய பெறுபேற்றை பெறும் நோக்குடன் அதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து நடைமுறைப் படுத்துவர் இதன் காரணமாகவே தனியார் கல்வி நிறுவனங்களையும் நாடுகின்றனர். அத்துடன் பத்திரிகை, வானொலி மூலமாகவும் தகவல்களைப் பெறுவர்.

## 2. தமது உரிமையை நிலை நாட்டுதலும் மற்றையோரைக் கட்டுப்படுத்துதலும்.

வகுப்பொன்றில ஏனைய மாணவர்களைக் கட்டுப்படுத்தும் தன்மையை இவர்களிடத்தே காண முடிகிறது. இப் பொறுப்பை ஆசிரியர்களும் இவர்களுக்கு விசேடித்த உரிமையாக வழங்கியுள்ளனர்.

உதாரணமாக வகுப்பு முதல்வர்களாகவும் மாணவ முதல்வர்களாகவும் இவர்களே நியமிக்கப்படுகின்றனர்.

ஏனைய மாணவர்களின் விடயங்களில் தலையிட்டு அனுகூல, பிரதிகூல விளைவுகளை ஏற்படுத்துவர். கடைநிலை மாணவரது இயலாமையை ஆசிரியர் கூட்கு எடுத்துக் கூறி இருவருக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் அதே வேளையில் தமக்கு எதிரானவர்களைத் தாமே நேரடியாகத் தாக்க முடியாதவிடத்து ஆசிரியரின் அவதானிப்பிற்கு அவர்களைத் தகாதவர்களாக எடுத்துக் காட்டித் தண்டனைக்கு உட்படுத்துவதன் மூலம் அவர்களைக் கட்டுப்படுத்தி தமது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வர்.

## 3. தயக்கம் இன்றி உரையாடுதலும் அணுகுதலும்.

இவர்களது வெற்றிகளிற்குக் காரணிகளாக அமைவன தயக்கம் இன்றி அளவளாவும் தன்மையும், தமது நிலையை அல்லது கருத்தை மற்றையோர்க்கு புரியக்கூடியவாறு எடுத்து இயம்புதலும் ஆகும்.

இதன் காரணமாகத்தான் முதற்தர மாணவர்கள் பயமின்றி ஆசிரியரிடத்தில் அணுகி தமது ஐயங்களையும், கருத்துக்களையும் கூறி தெளிவு பெறும்போது கடைநிலை மாணவர்களோ பயம், கூச்சம் போன்றவற்றால் துணியாது தெளிவு பெறமுடியாது காணப்படுவர்.

## 4. மற்றையோரைத் தம்மில் சார்ந்திருக்கச் செய்தல்

வகுப்பொன்றில் அபிப்பிராயம் எழுமாயின் அதனை நிராகரிக்கும் அல்லது உறுதிப்படுத்தும் தன்மை இவர்களையே பெரும்பாலும் சார்ந்திருக்கும். அக்கருத்தை செயற்படுத்தும் வழிகளையும் இவர்களே கைக்கொள்வர்.

## 5. அதிபர், ஆசிரியர்களைக் கவருதல்

முதல்தர மாணவர் தமது ஒவ்வொரு செயற்பாட்டின் மூலமும் அதிபர், ஆசிரியர்களைத் திருப்தி செய்ய முனைவர் ஆசிரியர்களிடம் நன்மதிப்பைப் பெறும் நோக்குடன் கவனத்துடன் நடக்க முற்படுவர். வீட்டு வேலைகளையும் வகுப்பு பாடங்களையும் தாமாகவே ஆர்வத்துடன் முடித்து ஆசிரியர்களின் பார்வையில் விசேடித்தவர்களாகத் தோற்ற முயலுவர்.

## 6: எதிர்பாலாரிடத்தில் நன்மதிப்பு பெற்றிடுதல்.

பொதுவாக முதல்தர மாணவர்கள் எதிர்பாலாரிடத்தில் நன்மதிப்பு பெற்றிருப்பர். இதுவிடயத்தில் ஓரிருவர் திசை மாறலாம். ஆனல் பொதுவாக இவர்கள் தமது பெற்றோர், அதிபர், ஆசிரியர்களைத் திருப்திப் படுத்த வேண்டியிருப்பதாலும் அந்த மரியாதைப் பயத்தினாலும் தம்மைக் கட்டுப்படுத்தி நடக்கவே முற்படுவர்.

முதற்தர மாணவரது செயற்பாடுகளில் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோரது ஒத்துழைப்பு கிடைப்பதாலும் அதை அவர்கள் நன்கு பயன் படுத்துவதாலும் பல்வேறு விடயங்களிலும் வெற்றியைக் காண்கின்றனர்.

வளர்ந்த பின்னும் கூட சமுதாயத்தில் முக்கியம் வாய்ந்தவர்களாக வும் காணப்படுகின்றனர். இவர்களது செயற்பாடுகளைச் சமுதாயம் ஆதரிக்கவே முற்படுகிறது.

---

## உங்கள் பரிசுப் பார்சல்

உங்கள் நண்பர்களின் திருமணம், பிறந்த நாட்களுக்கும் பரிசளிக்க சிறந்த வழி இதோ!

உள்ளூரில் தரமான வெளியீடுகளை கொண்ட புத்தக பரிசு பார்சல் ஒன்றை உங்கள் நண்பர்கட்கும், உறவினருக்கும் அறிவூட்டும் பரிசாக அளிக்க வழி செய்துள்ளோம்.

**உங்கள் பரிசுப் பார்சல்:- 100/- 50/-**

மேலுள்ள தொகைப் பணத்தை நீங்கள் அனுப்ப வேண்டிய விலாசம் தந்தால் உங்கள் பெயரில் அவர்கள் இல்லம் சேர வழி செய்கின்றோம். இலங்கை எப்பாகத்திற்கும் தபால் செலவு இனும். தரமான வெளியீடுகளை சேகரித்து இல்லம் ஒரு நூல் நிலையம் அமைக்க வழி செய்வதோடு, அறிவு வளர்ச்சிக்கு அருமபணியாற்றுங்கள்.

**வெளியீட்டாளர் கவனத்திற்கு:-**

பரிசுப் பார்சல் திட்டத்தில் உங்கள் வெளியீடுகளையும் இணைத்துக் கொள்ள ஆவல் கொண்டால வெளியீட்டில் 10 பிரதிகள் எமது வெளியீட்டகத்தில் சேர்ப்பித்து பார்சல் திட்டத்தில் இணைந்து கொள்ளலாம்.

# இளமையின் தளம்பல்கள்

அ. றூபறூஜ் — அம்பிட்டியா

"உங்களுக்கும் எனக்கும் இனிக் கதையில்லை" ஒரு சிறிய பிரச்சனையில் இரு அன்புசெய்யும் உள்ளங்களுக்கிடையில் எழுந்த ஓர் அவசரக்குரல். உறவுக்கு உலை வைத்து உணர்வுகளை ஊமாகிப் போகின்றாள். இல்லை என்னை அவள் உறவுகளற்ற தனிமை என்ற இருட்டறையினுள் தள்ளிவிட்டுப் போகின்றாள். ஒரு கணம் எனக்குள் சிரிப்பு அவளும் அதே அறையை நோக்கித் தானே போகின்றாள். வாழ்க்கையில் தனிமை உறவுகளுக்குள் மறைந்து வாழ்கின்றது. அதனால்த்தான் சில வேளைகளில் உறவுகளைத் தொடர்ந்து தனிமை எமது வாழ்க்கையை அலங்கரிக்கின்றது.

எனது மனம் சிலிர்த்து விட்டது. அவளது உருவை நேருக்கு நேர் ரசித்த எனது கண்களின் இமைகள் திறக்கத் திராணியற்று மூடிக் கொள்கின்றன. உருவங்கள் உறக்கத்தில் உலாவரும் வேளையிது எவரைப் பார்த்தாலும் அர்த்தமற்ற தன்மையுடன் நோக்கும் மனநிலையில் வாழுகின்ற வாழ்க்கையிது. இவைகள் தான் அவள் எனக்காக விட்டுச் சென்ற பரிசுகள். சந்தோஷமாக வாழ்ந்த எனக்கு இப்படியான ஒரு வாழ்க்கையா? இது எனக்கு வேண்டும் தானா? இவ்வாறாக யோசித்துக் கொண்டிருக்கும் வேளையில் சிறுசத்தம் கேட்டு பார்வையைப் பாய்ச்சுகின்றேன். சிறு தூரத்திலுள்ள தென்னையிலிருந்த தேங்காய் நிலத்தில் உருண்டு கொண்டிருக்கின்றது. சில பொருட்கள் தனிமைப் படுத்தப் படுகின்ற போதுதான் அதன் முழுப் பயனை அர்த்தத்தைப் பெறுகின்றது. அதே போல சில வேளைகளில் சில மனிதர்களுக்கு தனிமைதான் அவர்களின் வாழ்க்கைக்கு அர்த்தத்தை கொடுக்கின்றது. தாங்கள் யார் என்று அறிய வாய்ப்பளிக்கின்றது.

எனது வசந்தமான காலத்தை இந்தத் தனிமை, நாட்கள் கிழமைகள் என்று விழுங்கிக் கொண்டிருக்கின்றன. அன்று சயிக்கிளில் போன என்னை, பாதையிலே பார்வையாலே பதறவைத்து புன்முறுவல் செய்து சென்று விட்டாள். நானும் பதிலுக்கு தலையை அசைத்து விட்டேன். எத்தனை சந்தோஷம் என்னையே நான் மறந்தநிலை. ஏனென்றால் சயிக்கிளோடு ரோட்டில் நிற்க வேண்டியவன் கானுக்குள் நிற்கின்றேன். சுற்றுமுற்றும் பார்க்கின்றேன். ஒருவரும் என்னை அவதானிக்கவில்லை. எழுந்து சென்று அருகிலுள்ள பைப் அடியில காலைக் கழுவுகின்றேன் வாழ்க்கையில் சில வேளைகளில் சந்தோஷமான நிகழ்வுகள் சந்தோஷ மனநிலை எம்மை தனிமையை நோக்கி ஓட வைக்கின்றன எமது சுற்றுடலை மறந்தவர்களாக என் எமது நிலை மறந்தவர்களாக சில நேரங்களில் சாதனைகள் புரி

கின்றோமென்று சேற்றைப் பூசிக் கொள்கின்றோம். இந்தச் சேற்றைத் தண்ணீரால் கழுவமுடியாது. மண் ணடியில் ஓடும் கண்ணீரால் கால மெல்லாம் கழுவ வேண்டியவர் களாகி விடுகின்றோம்.

என்னைப் பார்த்து புன்முறுவல் பூத்திட்ட அவன் வீடு நோக்கி வீறு நடை போடுகின்றேன். சத்தம் போடாமல் பல தடவைகள் சென் றவன். அங்கு நான் கண்ட காட்சி அவள் புத்தகத்தோடு புன்முறுவல் பூத்துக் கொண்டிருக்கிறாள். எனது தரிசனம் அவள் தனிமையை கலைக்க முடியவில்லை. என்னுள் பல கேள்விகள் பழையபடி வேதாளம் முருங்கையில் ஏறிவிட்டதா? இல்லை அவள் நடந்தவைகளை இரை மீட்கின் றாள். எத்தனை இளசுகள் படிப்பு என்று பாடத்தை ஆரம்பித்து தனிமை என்ற தடாகத்தினுள் பாடத்தையும் மறந்து தம்மையும் மறந்து நீந்துகின்றார்கள். பொன் னான நேரத்தை வீணான தனிமை யில் மண்ணாக்குகிறார்கள் என்று நினைக்கும் வேளையில் அவள் பாதி விழிகள் என்னை கண்டு விட்டன. சட்டென்று என்னுள் உணர்வு ''எத்தனை இளசுகளுக்கு இந்தத் தனிமையிலும் ஒரு திருப்தி.

உறங்குவதற்கு சென்ற எனக்கு என்னுள்ளிருந்து வந்த ஒரு திடீர் சிந்தனை நான் தனிமையை நோக் கிப் போகின்றேன். அதையும் பொருட்படுத்தாது எனது இரவுப் பயணம் ஆரம்பமாகின்றது. மணிக் கூட்டு எலாம் அடிக்கும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்த போது 15 நிமிடங்கள் சென்று விட்டது. நான் இன்னும் நித்திரை கொள் ளவில்லையா என்று பிரகிக்கின்றேன் அந்தப் பதினைந்து நிமடங்களில் எத்தனை உருவங்கள் எத்தனை கோலங்களில் அத்தனையும் வெளி யில் வாய்விட்டு சொல்லமுடியாது. இதுகள் கனவுகளல்ல நினைவுகள்; நாளாந்த வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வுகள். நாம் பார்த்து ரசித் துப பேசிய உருவங்கள் எமது நெஞ்சங்களை கொள்ளை கொண்ட எமது உணர்வுகளோடு இரண்ட றக் கலந்து விட்ட உயிருள்ள உருவங்கள். அந்த உருவங்களின் கோலங்கள் இளசுகளை உருகவைக் கின்றன. மன போராட்டததினுள் தள்ளி விடுகின்றன. இங்கு தனிமை, நிதர்சனத்துக்கும், நிசப் தத்திற்கும் போராட்டக் களமமை துக் கொடுத்து விடுகின்றது.

இது இரவு 7 மணி சயிக்கிளில் மிக விரைவாக வீடு நோக்கிச் சென்ற என்னை கைதட்டி ஓர் உரு வம் அழைக்கின்றது கிட்டே சென்றால், அது எனது நண்பர் களில ஒருவன் மிக உசாராக நிற் கின்றான். அனுபவங்களைப் பரிமாறு கின்றான். ''மச்சான். அண்டைக்கு அவளுடைய வீட்டை போனநான் அவள் வீட்டிலே தனியத்தான் இருந்தாள். அப்பா வெளிநாட்டி லே, அம்மாவும், அவளுடைய தங் கச்சியும் கோயிலுக்குப போயிற்றி னம். எனக்குள் ஒரே மகிழ்ச்சி. ஒரு சுவீப் அடிச்சமாதிரி. ஒருவரும் இல்லைத்தானே ஒரு தட்டு ஒரு குட்டு என ஒரு கிள்ளு இன்னும் ஒரு படி சொல்லப் போனால் ஒரு

கிஸ்சு குடுப்போமா, விடுவோமா என்று என்னுள்ளே போராட்டம்'' அவன் தொடர்கின்றான் இப்படி எத்தனை இளைஞர்கள் அக்கா, தங்கச்சி என்று உறவுகளை ஆரம்பித்து தனிமை என்ற சந்தர்ப்ப சூழ்நிலையில் சிக்குண்டு உந்தப்பட்டு பெண்களின் உள்ளங்களில் ஓயாத உணர்வலைகளை உருவாக்கி விடுகிறார்கள்.

இது எனது நண்பனின் வேண்டுகோள் நான் அந்தப் பெண்ணிடம் சென்று அவனது விருப்பத்தைத் தெரிவித்தேன். ஒரு நீண்ட மௌனம் விடைதர மறுத்த அவள் என்னை தனிமையில் சந்தித்து கதைக்க விரும்பினாள். எனக்கு தூக்கிவாரிப் போட்டதுமாதிரி இருந்தது. இன்றுவரை அந்தப் பக்கம் தலை வைக்கவே இல்லை. ஏனென்றால் நண்பனுக்கு துரோகம் செய்து விடுவேனோ என்ற உணர்வு என்னில் மேலோங்கியிருந்தது.

பாவம் அந்த பிஞ்சு மனசு அதிலும் பரிதாபம் இந்த புதியரசு புரோக்கர் அடே, இந்தப் பெண்களின் பிஞ்சு மனசில் எத்தனை எண்ணக்கோலங்கள் வெளியில் சொல்லவே மாட்டார்கள் ஆனால் ஒரு சிரிப்பு, ஒரு மௌனம். இது தான் இவர்கள் பாடத்தை ஆரம்பிக்கும் பாணியா? எப்படி நம்பி காலை வைக்கிறது. அல்லது ஆண்கள் தான் இந்தப் பாடத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று காத்து கொண்டிருக்கிறார்களா? தனிமை தான் இந்தப் பாடத்தைக் கற்பிக்கும் கலாசாலையா? மனம் குழம்பிக் கொண்டே போகின்றது. சடக்கென்று படலை திறக்கும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்க்கின்றேன். அங்கு நான்கு பேர் துப்பாக்கிகளுடன் எனது தனிமையை கலைக்க வருகின்றார்கள். என்னையறியாமலேயே எனது கையிலுள்ள பேனா என்னைவிட்டு நழுவுகின்றது.

## தனிமை

உயர்தர வகுப்பில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர் ஒரு மாணவனை நோக்கி 'நீ தனிமையிலே இனிமை காண்கிறாயா?... தனிமையில் உன்னால் வாழ முடிகிறதா?...'' என்று கேள்விக்கணை கொடுத்தார்.

மாணவன் புன்சிரிப்புடன் ''என்ன சேர்... தனிமையில இனிமை காண முடியாமத்தானே, நீங்க ஒரு துணைய வச்சிக்கிறீங்க...'' ஆசிரியர் அப்போதுதான் தன் தனிமைநீக்கி, இனிமை அளித்த துணையை நினைத்து ஒரு கணம் மகிழ்ந்தார்.

அன்புக்குழந்தை
முருங்கன்

# சிந்திக்கவும் செயலாற்றவும்

T. M. அன்ரனிப்பிள்ளை, L L. B.

"காலம்" என்பது இயற்கை அன்னையின் இனிய கொடை. அதைப் பயன்படுத்துவது உனது தலையாய கடமை! "நேற்று" என்பது திரும்பி வராது – அது சரித்திரம். "நாளை" என்பது நிச்சயமற்றது – அது ஓர் எதிர்பார்ப்பு. இன்று என்பதே உனக்கு உரிமையானது – நிசமானது. எனவே, இன்று செய்யவேண்டிய செயலை நாளைக்கென்று பின்போடாதே!

பின்வரும் செயல் முறைகள் பயனுள்ளவை:–

1. இயன்ற மட்டும் காலத்தை வீணாக்காதே.
2. தினமும் உனது நிகழ்ச்சி நிரலை அமைத்து, அதன்படி செயலாற்று.
3. கடைசி நேரம் வரை தாமதியாதே.
4. ஒரு குறித்த செயல் முறை பற்றி ஆழமாய் யோசி, இயன்ற மட்டும் வாசி, வேண்டியவர்களுடன் சம்பாசி.
5. எந்தச் செயலையும் செவ்வனே திட்டமிட்டு, அதன்படி செய்.
6. தோல்வி ஏற்பட நேர்ந்தால் அதனால் ஏமாற்றம் அடையாதே.
7. மனத் தைரியத்தைக் கைவிடாது தொடர்ந்தும் செயலாற்று.
8. உனது முயற்சியில் வெற்றி பெறுதல் அம் மகிழ்ச்சியை ஏனையோருடன் பகிர்ந்து கொள்.
9. பகிர்வதால் துன்பம் குறைந்து விடும், இன்பம் நிறைந்து விடும்!

---

தோழமையுடன் பழகும் குணம் வாய்ந்தவர்கள்
தம் வாழ்க்கையில் சகல நிலைகளிலும் வெற்றியடை
கிறார்கள். இவர்கள் இருக்குமிடம் கலகலப்படைகிறது.

— புசல்லாவை இஸ்மாலிகா.

குடும்பக் கட்டுப்பாட்டுக் காலத்தில்
குழந்தைத் தட்டுப்பாட்டைப் பற்றியும்
கொஞ்சம் சிந்திக்கக் கோருகின்றேன்

மங்கலங்கள் அனைத்துக்கும் முன்னுக்கு நிற்கிற
மல்லிகை என்ன காய்த்துக் கனிகிறதா?
பிள்ளை இல்லாத பெண்ணுக்கு மட்டும் எத்தனை சாஸ்திரங்கள்?

— ஜெயபாலாஜி முருங்கன்.

# தனிமையிலே

# இனிமை காணமுடியும்

லோ. வ. இராயப்பு மா. ம. தி
இறையியல் கலாநிதி

தனிமை உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு அநுபவம். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தம் வாழ்நாளில் ஏதாவதொரு காலகட்டத்தில் தனிமையை உணருகின்றனர். உளவியல் நிபுணர்களின் எண்ணப்படி, மனிதவளர்ச்சியில் ஏற்படும் வெவ்வேறு பருவங்களில் உதாரணமாக வாலிபம், தெள்நிலை, வயோதிபம் முதலிய மாற்றங்கள் ஏற்படும் காலங்களில், மக்கள் தனிமையை உணருகின்றனர். இக் காலங்களில் தாங்கள் ஏனையோரால் கைவிடப்படுகிறார்கள். அவர்களிலிருந்து பிரிக்கபபடுகிறார்களெனக் கருதுகிறார்கள். தனிமை உணர்வுக்கு எந்த ஒரு மனிதனும் விதிவிலக்கன்று. மனிதவதாரம் எடுத்த கிறிஸ்துதானும் தனிமையை அநுபவித்தார். ஜெத்சேமனிப் பூங்காவில் இரத்த வியர்வை சிந்தித் துன்பப்படும் வேளை, தன் பரலோகத் தந்தையால் தானும் தான் கைவிடப்பட்டதாகக் கிறிஸ்து தனிமையை உணர்ந்தார். மக்களின் மீட்புக்காக அவர் சிலுவை மரத்தில் தொங்கும் வேளை, ''என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்'' (மத். 27 : 46) என உரக்கக் கூவித் தன் தனிமையை வெளிப்படுத்தினார்,

தனிமை பலதரப்பட்டது. உறவுகளில்லாத தனிமை, அன்பு இல்லாத தனிமை, தம்மைத் தாமாக ஏற்க முடியாத தனிமை உணர்வு. மக்களுள் அநேகர் தனிமையை விரும்பத்தகாத ஓர் அநுபவமாகவே கருதுகின்றனர், எனவே தனிமையிலே இனிமை காணமுடியாது என்ற முடிவுக்குத்தான் அநேகர் வருகின்றனர். காரணம் இவர்கள் தனிமையைத் தீமை காணும் மனப்பான்மையுடன், குறை காணும் கண்ணோட்டத்துடன் (Pcssimistic outlook) நோக்குகின்றனர். இவர்களது எண்ணத்தின்படி தனிமை ஒரு வெறுமை, ஓர் இருள் நிறைந்த நிலை. ஒரு பிரிவுக் கொடுமை. தனிமை ஒரு நெருப்பு. அது ஒரு நரகம். தனிமையை அநுபவிப்பவர்கள் தாம் பிறரிடமிருந்து ஒதுக்கப்பட்டவர்களாக, பிறரால் கைவிடப்பட்டவர்களாக உணருகின்றனர். பிறரால் ஒதுக்கப்படுவது தனிமைக்கு இன்றியமையாத ஒன்றில்லாவிட்டாலும், (ஏனெனில

ஒரு சிலர் மக்கள் கும்பலிலும் அதாவது மக்கள் மத்தியில் நடமாடும் வேளையிலும் தனிமையை உணர்கின்றனர்.) தனிமைக்கும பிறரிடமிருந்து ஒதுக்கப்படுவதற்கும் இடையில் தொடர்பு உண்டு.

இத்தகைய குறைகாணும் மனநிலையுடன் தனிமையைக் கண் நோக்குவோர் நிச்சயமாக அதில் இனிமை காண முடியாது. இந்தக் கருத்தில்தான் ஒரு கவிஞன் தானும் "தனிமையிலே இனிமை காண முடியுமா! நள்ளிரவினிலே சூரியனும் தெரியுமா?" என்று பாடியிருக்கிறான். தனிமை எவருக்கும் பயன் அளிக்க முடியாது என்பது பலரின் எண்ணம்.

ஆனால் தனிமையை நாம் நன்மை காணும் மனப்பான்மையுடன், அதில் நிறைவு காணும் கண்ணோட்டத்தில் (Optimistic outlook) நோக்கினோமாகில், தனிமை நம் ஆளுமையை வளர்ப்பதற்கும், அதில் இனிமை காணுவதற்கும் அது துணை செய்கிறதென்பது புலனாகின்றது. நிறை காணும் கண்ணோட்டத்திற்கும், குறை காணும் கண்ணோட்டத்திற்குமிடையில் உள்ள வேறுபாட்டைப் பின்வரும் உதாரணம் மூலம் விளக்கலாம். அரைவாசி தண்ணீருடன் உள்ள ஒரு போத்தலைப் பார்த்து, நிறைகாணும் கண்ணோட்டமுடையவன் அது அரைவாசி நிரம்பியிருக்கிறதென்பான். குறை காணும் மனப்பான்மையுடையோன் அது அரைவாசி காலியாக இருக்கிறதென்பான்.

தனிமையை நிறை காணும் கண்ணோட்டத்துடன் நோக்கினோமாகில், அது நம் உண்மையான சுதந்திரத்தையும் ஆளுமையையும் வளர்க்கத் துணை செய்யும். தனிமையில்தான் இறைவனின் குரலை, அவரது ஒலியை நாம் கேட்க முடியும். தனிமையில்தான் நாம் பேசும் வார்த்தைகள், ஆற்றும் செயல்கள் அனைத்தும் பிறர் நலம் கருதி நமக்கு இறைவனால் அளிக்கப்பட்ட கொடைகள் என்பதை அறிந்து கொள்ளுகிறோம். தனிமையில்தான் நமது உண்மையான பெறுமதியை உணர்ந்து, நம் பெறுமதிக்கும் நாம் பிரயோசனமுள்ளவர்கள் என்பதற்குமிடையில் வேறுபாடு உண்டு என்பதை உணருகின்றோம். நம்மிடம் எவ்வளவு உண்டு, நாம் எவ்வளவு பிரயோசனமுள்ளவர்களெனபதென்று, நமது பெறுமதியை அறிந்து நம்மிடமுள்ளதை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்பதைக் கண்டு பிடித்தலே வாழ்க்கையில் முக்கியம். உலகப் பொருட்களிலிருந்து நாம் விடுபட்டால்தான், நாம் முழுமனிதர்களாக வளர்ச்சியடைய முடியும். மக்களால் நாம் ஏற்றுக் கொள்ளப்படுவதன்று, தனிமையில் நம்முடன் பேசும் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதே முக்கியம்.

நாம் பேரின்பம் அடைவதற்கு ஏகாந்தம் என்னும் தனிமை அத்தியாவசியமென மாபெரும் சமயங்கள் அனைத்தும் போதிக்கின்றன. அனைத்துச் சமயங்களின் தலைவர்

கள், ஞானிகள், முனிவர் முதலியோர் நிறை அமைதியடைய ஏகாந்தம் எனனும் தனிமையை நாடிச் சென்ருர்களென்பது வரலாறு கூறும் உண்மை.

இந்து சமயத்தை எடுத்துக் கொண்டோமாகில், ஆன்மா முத்தி அடைய வேண்டுமானல், உலக வழியில் அது ஈடுபடாமல் கடவுள் நெறியில் ஈடுபட வேண்டும். முத்தியென்றுல் நீக்கம் என்பது பொருள். இதை மோட்சம் அல்லது வீடு என்றும் கூறுவர். இதையடைய உயிர் பாசத்தை நீங்க வேண்டும். பாசக் கட்டு ஒழிய வேண்டுமானல், குரங்கு போன்ற நம் மனதை உலக வழியில் செல்லவிடாமல் கடவுளின் பாதையில், இறை நெறியில் திருப்ப வேண்டும். இதற்கு ஏகாந்தம் என்னும் தனிமை நிலை மிகவும் அவசியமென்பது இந்து சமயத்தின் கோட்பாடு. பிரமனுடன் ஒன்றிக்கத் தனிமை அவசியமென பகவத் கீதையிலும் கூறப்பட்டுள்ளது. அதன் இறுதி அதிகாரமாகிய மோட்ச சந்நியாச யோகத்தில, ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுக்கு அறிவுரை கூறும் பொழுது "தனிமையை நாடுவோனய், ஆசைகள் குன்றி வாக்கையும், உடம்பையும் மனத்தையும் வென்று தியான யோகத்தில் ஈடுபட்டு, எப்போதும் பற்றின்மையை நன்கு பற்றியவனய் ... சாந்தநிலை கொண்டவனே பிரம்மனுடன் ஒன்றிக்க அருகதையுடையவன." (18-ம் அதிகாரம் 53, 54-ம் சுலோகங்கள்) என வலியுறுத்துகிருர் சைவப் பெரியாருள் ஒருவரான ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் அருளிய உபதேச மொழிகள் என்னும் நூலில் "ஒருவரும் வராத மூலையிலோ, காட்டில் தன்னந் தனியாகவோ, உனது உள்ளமாகிய நிசப்தமான கோவிலிலோ, ஈஸ்வரனைப் பற்றிச் சிந்தனை செய்." எனத் தனிமையின் இனிமை பற்றி மிகவும் அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

புத்த பெருமானின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கும் பொழுதும், அவரும் நிர்வாணம் (மோட்சம்) என்னும் பேரின்ப நிலையின் அதி உன்னத அமைதியை அடைய அதாவது இவ்வுலக தீமைகள், துன்பங்கள் முதலியனவற்றிலிருந்து விடுபடுவதற்காக தனது 29-ம வயதில், தன் மனைவியையும குழந்தையையும் துறந்து, ஏகாந்தம என்னும் தனிமை நிலையை நாடிச் சென்ருரென அறிய வருகின்ருேம்.

கிறிஸ்தவ சமயத்தின் மாபெருந் தலைவர் கிறீஸ்துவும் அடிக்கடி தனிமையை நாடினர் என நற்செய்தி ஏடுகளில் வாசிக்கிருேம். ஒருமுறை அவர் கலிலேயா நாட்டிலிருந்த பொழுது ஒருநாள் மாலை வேளை அந்த ஊர் முழுவதுமே ஒன்ருகத் திரண்டு அவரிருந்த வீட்டு வாயிலருகே வந்தனர். அவர் பல்வேறு நோய்களால் வருந்திய பலரைக் குணப்படுத்தினர். "அதிகாலையில் கருக்கலோடு எழுந்து புறப்பட்டுத் தனிமையானதோர் இடத்திற்குச் சென்ருர். அங்கே செபம் செய்து கொண்டிருந்தார்" (மாற்கு 1 : 35). கிறிஸ்து தனிமையை நாடியதன்

நோக்கம் இறைத்தந்தையுடன் ஒன்றித்து, மன அமைதியைத் தேடுவதாகே. இதன் விளைவாக அவர் தனிமையிலே இனிமை கண்டார்.

"எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி, அங்கே எனக்கோர் இடம் வேண்டும்." என அல்லற்பட்டு அங்கலாய்ப்புடன் வாழும் இன்றைய சமுதாயத்தினருக்குத் தனிமை அவசியம். அங்குதான் அவர்கள் பூரண மனத்திருப்தியையும் முழுமையான அமைதியையும் அடைய முடியும். நிறைகாணும் கண்ணோட்டத்துடன் நோக்கும் தனிமையிலே இனிமை காண முடியும்.

## அன்புடன் சில நிமிடம்

— ஜேம்ஸ் பிருவோகெஸி

பொன் நகையை தவிர்த்து புன்னகையை
முழுமையாக அணிந்திருக்கும் - என் அன்பே!
நீ என மேல் காட்டும் அன்புக்கு
என்னால் ஈடு செய்ய முடியுமோ?
உடலுடன் கலந்திருக்கும் - உயிரை
மதிக்கும் மனிதரிடையே – உயிரை
விட மேலாய் என்னை நினைக்கும் - உன்னை
நான் எப்படித்தான் நினைப்பதோ?
பார்வைக்குத் தான் நீ குமரி ஆனால்
பழக்கத்தில் நீ சிறு குழந்தை
சிரிப்பதே உனது பொழுது போக்கு
சிலருக்கோ அதனால் உன் மேல் வெறுப்பு
பலருடனும் பகிரங்கமாக பழகும் உன்னை
காம தேவதையோ என்றும் – நினைக்கிறார்கள்
கலங்கிய தண்ணீரென்றும் நினைக்கிறார்கள் – மொத்தத்தில்
உன்னை காலில் போட்டு மிதிக்க முற்படுகிறார்கள்.
அன்பே!
நீயோ மலர்ந்து தானாகவே மணம் வீசும் ஒரு
வெள்ளை றோஜா ஆனால் சிலரோ
நீ பலரால் கசக்கி மணக்கப்படும் – ஒரு
காட்டு ரோஜா என்றல்லவா நினைக்கிறார்கள்.
உண்மையிலும் உண்மை ஒன்று யார் உன்னை வெறுத்தாலும்
ஊர் உன்னை தூற்றினாலும் என்னைப் பொறுத்த வரையில்
நீ ஒரு தரம் குறையாத தங்கம்
என் உடலின் ஓர் அங்கம்.

# ஆளுமை சிறைப்படுத்தப்படுகின்றது

— சாவி

**அவன்** எண்ணினன் - தான் ஒரு நல்ல தகப்பன் என்று. அவனுக்கு மூன்று பெண் பிள்ளைகள். அவர்களை செல்லமாக வளர்த்துவந்தான். அவர்கள்தான் அவனுக்கு உயிர். அவர்கள் சிறு தவறுசெய்தாலும் அவனால் பொறுக்கமுடியாது. கடிந்து பேசிய பினனர் பல மணித்தியாலங்களாக மௌனமாக வருத்தத்தில் ஆழ்ந்திருப்பான்.

ஒருநாள் அம்மூவரும் ஓர் இரவு விருந்துக்கு தகப்பனுக்குத் தெரியாமல் சென்றுவிட்டு நடித்து வந்தார்கள். சில நாட்களின் பின்னர் தகப்பனுக்கு இவ்விடயம் தெரியவந்தது. விசாரணை தொடங்கியது.

''நீங்க செய்தது தவறு என்று கூறவில்லை. அழகு அல்ல என்றுதான் கூறுகின்றேன். நாம் வாழும் சமுதாயம் பொல்லாதது. இல்லாததை எல்லாம் சொல்லி நல்லவர்களை யும் நாசமாக்க வல்லவர்கள் எமது சமூகத்தில் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்'' என்று கர்ஜித்தார்.

''நாங்க இப்ப வயதுக்கு வந்துவிட்டோம். எங்கிட பிரச்சனை யில தேவையில்லாமல் தலையிடாதீங்க. ஒரு நாளைக்கு வெளியில போய் சாப்பிட்டுவர எங்களுக்கு உரிமை இல்லை, சுதந்திரம் இல்லை, சாப்பாடு இல்லாமல் வீடு வீடாக, இரவு இரவாகத் திரிந்து பிச்சை எடுக்கிற நாய்கள் என்று எங்களை நினைத்துவிட்டீங்க? நாங்கள் என்ன இப்ப பெரிய பிழை விட்டிற்றம் என்று கத்துறீங்க!''

என்று மூவரும் மாறி மாறிக் கத்தினார்கள். தான் தனியனாகிவிடப் பட்டதை உணர்ந்த தகப்பன் மீண்டும் மௌனமாகினன்.

ஒவ்வொரு தனிமனிதனும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தனிமைப் படுத்தப்படுகின்றான். அவனது கருத்துக்கள், அவனது உணர்வுகள் மதிக்கப்படாதபொழுது அவன் தனிமையை உணர்கின்றான். பணம், பொருள், தொழில் போன்றவை முதன்மைப்படுத்தப்பட்டு உறவு பலவீனப்படுத்தப்படும்பொழுது அவன் தனிமையை அனுபவிக்கின்றான்.

இயந்திரமயமாக்கப்பட்ட சூழலில் இன்று இயந்திர மனிதர்கள் அதிகரித்துவருகின்றார்கள். தொடர்புச்சாதன மோகத்தால் குடும்பத் தொடர்புகள் தடைப்பட்டுவருகின்றன. உணர்வுகளும் உறவுகளும் பேரம்பேசப்பட்டு சோரம்போகின்றன. குடி, போதைவஸ்து தாக்கத்தால் குடும்ப அந்தரங்கங்கள் அம்பலமாகின்றன. விளைவாக, கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் விரும்பாதவர்களாக அந்நியமாக்கப்படுகின்றார்கள். வீட்டினில் இடம்பெறுபவை வீதிக்கு வலம் வருகின்றன.

இச் சம்பவம் அண்மையில் நிகழ்ந்தது. நீள்வரிசையில் குடிசைகள் அமைந்துள்ள ஒரு கிராமத்தில் எனது நண்பன் ஒருவருடன் கதைத்துக் கொண்டு நின்றேன். திடீரென ஒரு சிறுவனின் அழுகுரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். வீட்டு வாசலில் ஒருவன் அச்சிறுவனை ஒரு பெரும் தடியால் அடித்துக்கொண்டிருந்தான். அடித்துக்கொண்டிருப்பவன் குடிவெறிக்கு அடிமையாகிய அவனது தகப்பன்தான் என்பதை அறிய அதிகநேரம் செல்லவில்லை. அதேவேளையில் அச்சிறுவனின் தாய் வீட்டின் பின்புறமாயிருந்து ஓடிவருவதைக் கண்டேன். மகனைத் தூக்க அவள் வருகின்றாள் என என்னுள் நினைத்துக்கொண்டேன். ஆனால் அவளோ முள்வேலியால் பாய்ந்து வெளியே ஓடிவிட்டாள். சிறிது நேரத்தில் மகனும் தப்பி ஓடிவிட்டான். தகப்பன் வீட்டுக்குள் போவதும் வெளியே வருவதுமாகக் காணப்பட்டான். அவனை அணுகிக்க ஒருவரும் செல்லவில்லை.

அடிமையாக்கப்பட்ட மனநிலையில் வாழும் ஒவ்வொரு மனிதனும் மிகவும் கேவலமான வாழ்க்கை நிலைக்கே ஆளாக்கப்படுகின்றான். அவன் சிறைப்படுத்தப்பட்ட ஆளுமையை உடையவனாய் தன்னையும் சித்திரவதைப்படுத்துபவனாய் காணப்படுவான். அவன் நிறைவேற்றப்படாத ஆசைகள் காயப்படுத்தப்பட்ட உணர்ச்சிகள் போன்றவற்றைத் தன்னுள் அமுக்கிக்கொண்டவனாய் தனிமைப்படுத்தப்பட்டு காணப்படுவான். அவன் ஆர்வம், உற்சாகம் அற்றுக் காணப்படுவான்.

ஒருவன் தனிமைப்படுத்தப்படுவதற்கான காரணிகள் பின்வருமாறு:

— தனது நிறைகளையும் குறைகளையும் சரியாக எடைபோடாது போலிகளில் மயங்குதல்.

— தனது பலவீனங்களை ஏற்றுக்கொள்ள மறுத்தல்.

— பிரச்சனைகள் சிறிது சிறிதாக முளைவிடும்பொழுது அவற்றை எதிர்கொள்ளாது ஒதுங்குதல்.

— பிரச்சனைகளுக்கான அடிப்படைக் காரணிகளை இனம்காணுது விடுதல்.

— எந்த ஒன்றிலும் பிடிப்பில்லாது காணப்படல்.

— எல்லோரிலும் சந்தேகம் கொண்டு எவரையும் நல்ல நண்பனாக ஏற்காமை.

எந்த ஒரு பிரச்சனைக்கும் தீர்வின் ஆரம்பக்கட்டம் அப்பிரச்சனையை இனம் கண்டு ஏற்றுக்கொள்ளுதலே. எனக்கு பிரச்சனை எதுவும் இல்லை என்று சொல்லிச் சமாளித்தல் அல்லேல் எனது இயலாமையை ஏற்க மறுத்தல் என்னை நான் ஏமாற்றிக்கொள்ளுதலேயாகும்.

எனவே, நான் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டேன், சிறைப்படுத்தப் பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றேன் என்பது எதிர்பாராத ஒன்றேயாகும். எனது ஆளுமைச் சிறைப்படுத்தப் படலிலிருந்து விடுதலை யடையக்கூடிய சில வழிமுறைகள் வருமாறு:

+ என்னை நானாக ஏற்றுக்கொள்ளுதல்.

+ எனது நண்பனை, நம்பி என்னை வெளிப்படுத்துதல்.

+ எனக்குப் பிடித்தமானவற்றில் ஈடுபாட்டை அதிகரித்தல்.

+ ஏனையவர் விரும்புவனவற்றை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளல்.

+ ஏமாற்றம் தருவனவற்றை / தருபவர்களைத் தவிர்த்துக் கொள்ளுதல்.

+ ஏற்றமிகு சிந்தனைகளை என்னுள் கொண்டிருத்தல்.

---

இலட்சியம் ஓர் அடிப்படை நோக்கத்துடன், இணையும்போதுதான் வலிமை யையும், துடிப்பையும் பெறுகிறது.

— ஜேம்ஸ் ஆலன்

ஒருவன் தனக்காகவே மட்டும் பாடுபட்டால், ஒருவேளை பிரபலமான அறிவாளியாகலாம். மாபெரும் ஞானியாகலாம், மிகச் சிறந்த கலைஞ ராகலாம். ஆனால் குறையில்லாத, உண்மையிலே மாபெரும் மனித ராக முடியாது.

— கார்ல் மாக்ஸ்

# அன்புடன் சில நிமிடம்

ஜேம்ஸ் பிருவோ கெலி — திருமலை

பொன்நகையை தவிர்த்து - புன்னகையை
முழுமையாக அணிந்திருக்கும் — என் அன்பே!
நீ என் மேல் காட்டும் அன்புக்கு
என்னுல் ஈடு செய்ய முடியுமோ?

உடலுடன் கலந்திருக்கும் — உயிரை
மதிக்கும் மனிதரிடையே — உயிரை
விட மேலாய் என்னை நினைக்கும் - உன்னை
நான் எப்படித்தான் நினைப்பதோ?

பார்வைக்குத்தான் நீ குமரி — ஆனுல்
பழக்கத்தில் நீ சிறு குழந்தை
சிரிப்பதே உனது பொழுது போக்கு
சிலருக்கோ அதனுலே உன் மேல் — வெறுப்பு.

பலருடனும் பகிரங்கமாக பழகும் — உன்னை
கிராம தேவதையோ என்றும் — நினைக்கிறுர்கள்
கலங்கிய தண்ணீரென்றும் — நினைக்கிறுர்கள்
மொத்தத்தில் உன்னை காலில் போட்டு
மிதிக்க முற்படுகிறுர்கள்.

அன்பே!

நீயோ மலர்ந்து தானுகவே மணம் வீசும் - ஒரு
வெள்ளை ரோஜா — ஆனுல் சிலரோ
நீ பலரால் கசக்கி மணக்கப்படும் — ஒரு
காட்டு ரோஜா என்றல்லா நினைக்கிறுர்கள்.

உண்மையிலும் உண்மை ஒன்று
யார் உன்னை வெறுத்தாலும்
ஊர் உன்னை தூற்றினுலும்
என்னைப் பொறுத்த வரையில்
நீயொரு தரம் குறையாத தங்கம்
என் உடலின் ஓர் அங்கம்.

# தனிமை ஒரு நரகம் (சிறுகதை)

>< பொன்ராசா றெஜினு ><

வெனி என்று அழைத்தபடி வீட்டினுள் நுழைகின்றாள் திரேசா. நுழைந்தவள் தன் உடைகளை மாற்ற அறையினுள் திரும்பிய போது கால்கள் அசையாத வண்ணம் திகைத்து நின்றவளாக கட்டிலின் மேல் அவளின் கண்கள் வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டு ஆனந் தக் கண்ணீர் வடிக்கின்றாள். நீண்ட நாட்களின் பின் பிரிந்த மூத்த செல்வம் கட்டிலில் முகம் குப்புற படுத்துக் கிடக்கும் காட்சிப் படலம் தான் என்ன ஆனந்தம். பத்து ஆண்டுகளுக்கு முன் கண்டதை இப் போது காண்கிறேன் என்ற பெருமிதத்துடன் வீரநடை போடுகின்றாள். கட்டிலின் அருகே நித்திரை மயக்கம் போல் கிடக்கும் தன மகளைப் பார்த்து முத்தம் செய்தவளாக பழையதை நினைக்கின்றாள். அவளின் கண்முன் படக் காட்சிபோல் ஓடுகின்றது அச்சம்பவம்...

அதிகாலை நேரம், டாங்... டாங்... என்று கோவில் மணி ஓசை ஒவ் வொரு நாளிலும் பார்க்க இன்று மிகவும் ஆரவாரத்துடன் ஒலிக்கின் றது. இந்த ஒலி அலைகளுடன் கண் விழித்து இறைவனுக்கு நன்றி கூறும் விதத்தில் வானொலிப் பெட்டியை இயக்கி பஜனையைப் போட்டு விடுகிறாள். இதில் திரேசா ஒரு முழு நிறைவைக் காண்பாள். எதோ தனிடம் இருக்கும் ஒரு துன்பத்தை அகற்றுவது போல் அவளுக்கு இந்த பஜனை பாடல்கல் இருக்கும. பாடலின் இசையுடன் மன அமைதி கொண்டு தன் காலைக்கடனை முடித்து தன் பிள்ளைகளைப் பாட சாலை அனுப்பி வைப்பாள்.

பிள்ளைகள் மூவரும் இருக்கும் போது பூரித்து கிடக்கும் வீட்டையும், தன் முகமலர்ச்சியையும் எண்ணுவாள். வெனி வீட்டில் மூன்றுவதாக இருந்தாலும், சின்னவளாக இருந்தாலும் புன்சிரிப்பும், முகமலர்ச்சியும் அவளின் தோற்றமும் வரவேற்பு அறை போலவே தோற்றமளிக்கும். சுகந்தியும் அதே பாவனையும், சுபாவமும் கொண்டவளாக இருந்தாலும், இன்னும மேலாக பாடடுக்களிலும், நாட்டியங்களிலும் முன்னிடம் வகித்தவளாக இருந்தாள். குமாரும சகல விளையாட்டுக்களிலும் கெட் டிக்காரனாகவும், வீட்டில் சந்தோஷத்துடனும், மகிழ்ச்சியுடனுமே வாழ்ந்தான். திரேசாவுக்கோ கணவன் இல்லாத குறையே தெரிய வில்லை வீட்டில் பொங்கி வழியும் மகிழ்ச்சியுடன் இருந்தாள்.

ஆனால் குமாரின் போக்கில் திடீரென மாற்றம். டியூசன் முடிந்து மாலை ஆறு மணிக்குள் வரும் குமார் இன்று 9–30 சென்றும் வர வில்லை. வைத்த கண் வாங்காது வழி மேல் விழி வைத்து பார்தத

வண்ணமாக இருக்கிறாள். அம்மா இன்று இவ்வளவு நேரமாகியும் அண்ணாவைக் காணவில்லையே. வெனியின் குரலிலும் ஒரு நடுக்கம். வெனியை திடப்படுத்தியவளாக அவளைத் தூங்க வைத்து விட்டு வெளியில் வரும்போது கால்கள் தள்ளாட கண்கள் சிவக்க, தலை ஆடி ஆடி வரும் உருவைக் கண்டு இது என் குமாரோ என்ற அச்சத்துடன் உற்று நோக்கியவள் தலை விறைத்து நிற்கின்றாள்.

ஒவ்வொரு நாளும் ஒலிக்கும் மணி ஓசை இன்று துக்க ஒலி போலவே அவளை துயில் எழுப்பியது. குமாரின் செய்கையை நினைத்துக் கொண்டு கோபத்தின் மத்தியிலும், சோகத்தின் மத்தியிலும் தன் வேலைகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறாள். குமார் வழமைப் பிரகாரம் தன் பாடசாலை உடை அணிந்து கொண்டு கம்பீரமாக தாயின் முன் சென்று காசு தரும்படி கேட்கிறான். வாய் மூடும் முன்பே சடார் என்ற சத்தம் குமாரின் கன்னத்தில், அத்தோடு அவளின் கோபத்தை தீர்க்க முடியாதவள் வாய்க்கு வந்தபடி ஏசினாள். நீ எனக்கு செய்யும் பிரதி உபகாரம் இதுதானா? அப்பா இல்லாமல் உங்களை எவ்வளவு கஸ்ரப்பட்டு வளர்த்து படிக்க வைத்தேன். உனக்கு மனச்சாட்சியே இல்லையா? இரவில் நீ வந்த நிலையை மறந்துவிட்டு வந்து இப்போது துணிவாக காசு கேட்கிறாயா? என்று தன் கோபத் தணலைத் தீர்க்கின்றாள்.

ஒன்றுமே புரியாத வெனி அண்ணா என்று செல்லமாக அழைத்தபடி பாடசாலை வரவில்லையா என்று கேட்க, கோபத்தில் நின்ற குமார் தாயின் மேல் தீர்க்க முடியாத கோபத்தை தங்கையின் மேல் அடி, உதை, பேச்சுக்களுடன் தீர்த்து விட்டான். இதன் பின்பு வீட்டில் பெரிய குழப்பம். வீடோ அழுகுரலில் மிதக்கின்றது.

""குமார் எல்லாவற்றையும் உதறித்தள்ளியவனாக வீட்டுப்படிக்கு கோடு போட்டுவிட்டு வீறுநடை போடுகின்றான். திடீரென தாயின் குரல், குமார்! குமார்!! எங்கே செல்கின்றாய்? எங்களை விட்டு தனிமையான வாழ்க்கை வாழப் போகிறாயா? தனிமையின் கஸ்ரத்தை நீ உணரவில்லை. அது ஒரு நெருப்படா. அது ஒரு நரகம். இதை அனுபவித்தவள் நானடா. இப்போது உனக்குக் கூறுகிறேன். இதை நாடிச் செல்லாதே குமார்! குமார்!!'' என்று கத்தியவளாக கீழே விழுகின்றாள். குமாரோ அதை அக்கறைப்படுத்தாமல் தொலைவு தூரம் சென்று விட்டான்.

மயக்கம் தெளிந்தவளாக வீட்டைப் பார்க்கின்றாள். சந்தோஷத்தில் மிதந்த வீடு துக்கத்தில் மூழ்கிக் கிடக்கின்றது. என்றாலும் இரு பெண் பிள்ளைகளும் வீட்டில் இருந்து ஆடும் நாட்டியத்திலும், பாடும்

பாட்டுக்களிலும் தாயை மகிழ்விப்பார்கள். ஆனால் அந்த நேரத்தில் சந்தோஷத்தில் மூழ்கிக்கிடந்தாலும் பின்பு கணவனை இழந்த கவலையும் அத்தோடு மகனை இழந்த துக்கமும் அவளின் முகத்தில் சோகப்படலமாக படர்ந்து காணப்படும்.

சொந்த பந்தங்களை விட்டுச் சென்று தனிமையாக வாழச் சென்ற குமார் சொற்ப காலத்துக்கு அதாவது பணம் இருக்குமட்டும் நண்பர்களுடன் கூத்தாடிக் கொண்டு இருந்ததில் அவனை அவ்வளவாக தனிமை வாட்டவில்லை. ஆனால் இக் கொண்டாட்டம் நீடிக்கவில்லை. எல்லா நண்பர்களும் காசு குறைந்து செல்ல, மெல்ல மெல்ல அவனை விட்டு விலக்கி விட்டார்கள். அப்போது குமாரின் தனிமையும் மெல்ல மெல்லத் தொடங்குகின்றது. எப்படிப்பட்ட நண்பர்களுடன் சேர்ந்துள்ளேன் என்ற உணர்வும் தன்னுடைய தாய் சகோதரர்களை இவர்களின் ருசி கண்டு உதறித் தள்ளினேனே என்று வருந்துகிறான். இதில் இருந்து தனிமை என்னும் இருட்டில் முற்றும் முழுதாக மூழ்கத் தொடங்குகின்றான். ஓ! இதுதான் அம்மா கூறிய நரகம் என்னும் தனிமை, தனிமையிலும் யாராவது வாழமுடியுமா? அதிலும் பார்க்க சாவதே மேல் என்று நினைக்கிறான். ஐயோ தனிமை மனிதனையே கொல்லும் அளவுக்கு மேற்கொள்ளுகிறதே என்று நினைத்தாலும் அதற்கு இடம் கொடுக்காமல் முன்பு நடந்தவைகளைப் பற்றி மீளாய்வு செய்கின்றான். அவைகளை நினைத்து மனம் வருந்துகின்றான். ஆ! கடவுளே, எவ்வளவு சந்தோஷமாய் இருந்த என்னை நானே கொல்லுகிறேன் என் சிநேகிதர்களை நம்பி வெளிக்கிட்டேனே. இப்படி பலவற்றை சிந்தித்து தலையைப் போட்டு கருத்து மோதலால் உடைக்கின்றான். எத்தனை ஆயிரத்தைத் தான் நினைத்தாலும், செய்தாலும் தனியவே செய்கிறேன். அதனால் என்ன பயன்! எனக்கும் சந்தோஷமில்லை, மற்றவர்களுக்கும் சந்தோஷம் இல்லை. தனிமையான வாழ்வு யாருக்குந்தான் பயனுள்ளது என்று பலவாறு சிந்திக்கிறான்.

பட்டமரம் என்றாலும் ஒரு வகையில் பயனாய் இருக்கும். ஆனால் நானோ பட்டமரத்திலும் கேவலமாய்ப் போய்விட்டேனே. அம்மா தங்கைகளுடன் இருக்கும் போது என் தோற்றம் தான் என்ன? முகமலர்ச்சி தான் என்ன? இப்போது தனிமை என்னும் பேய் என்னை உலுக்கின்றதே. எப்படித்தான் தனிமையைப் போக்க முடியும் என்று பலவாறு சிந்தித்தவனாக தன் பாதையை மாற்ற முற்பட்டான்.

ஒட்டி உலர்ந்த உடலுடனும், மனவேதனையுடனும் தங்கைகளின் பாடசாலையை நோக்கி மெல்ல மெல்ல நடைபோடுகின்றான். தங்கைகளைக் கண்டாவது மனநிம்மதி அடைவோம். தனிமை என்னும் இருளை

அகற்றுவோம் என்ற எண்ணத்துடன் பாடசாலை வாசலில் காத்துக் கொண்டு நிற்கிறான். பிள்ளைகள் வெள்ளை வெளீர் என்று ஓடும் அருவிகள் போல் வரிசையில் போய்க்கொண்டே இருக்கிறார்கள். உடனே தன் பாடசாலை வாழ்க்கையை நினைத்து இரத்தக் கண்ணீர் வடிக்கிறான். இதே சிந்தனையில் நின்றவன் தங்கைகளை தவறவிட்டுவிட்டான். மனம் சோர்ந்தவனாக திரும்பிச் செல்கின்றான். இப்படி பல முறை வந்து காவலனைப் போல் வாசலடியில் நின்று ஏமாற்றத்துடன் சென்று விடுவான்.

உறுதியான மனதுடன் இன்றாவது கண் குளிர என் தங்கைகளைக் கண்டு பேச வேண்டும் என்ற ஆவலுடன் பாடசாலை முடியுமவரை காக்காது அதிபரின் அனுமதியுடன் தங்கைகளை அழைக்கிறான். அதிபர் இவரை உங்களுக்குத் தெரியுமாவென வினா எழுப்ப இருவரும் ஒருவரை ஒருவர் நோக்குகிறார்களேயன்றி பதில் கூறவில்லை. அதிபர் கோபத்துடன் உங்களைத் தெரியாதவர் உங்களைப் பார்க்க வந்தாரா? என்று மிரட்டல் பேச்சுடன் அவர்கள் இருவரும் வகுப்பறையை நாடகுமாரும் அழாத குறையில் வெளியேறுகிறான். மனம் நொந்தவனாக பாடசாலை முடியும் மட்டும் காத்துக் கொண்டு நிற்கிறான். இரு தங்கைகளையும் அழைத்து எனனை உங்களுக்குத் தெரியாதா? என்னை உற்று நோக்கிப் பாருங்கள் என்று கூறிக்கூட அதனை அறியாதவர்களாய் நிற்கிறார்கள். ஆனாலும் மனதிற்குள்ளே எங்கள் அண்ணாவைப் போல் இருக்கிறதே என்று வெளி எண்ணும் போது குமாரே நான்தான் உங்களுடைய அண்ணன் என்று கூறி முடிக்கு முன்பே ஆனந்தக் கண்ணீர் வடித்து கட்டியணைக்கின்றார்கள். அதில் இருந்தே அவனுடைய கண்கள் குளிர, உடல்களில் உற்சாகம் பிறக்க குமாரின் இருள் அகன்று ஒளி வீசும் சுடரைக் கண்டான். கட்டியணைத்தவர்கள் தமையனை இருளில் மூழ்க விடாமல் ஒளியின் பாதைக்கு அழைத்துச் சென்றார்கள். குமாரின மனச் சாட்சியோ அவனை தடுதது மறிததது. எப்படி வீட்டிற்குள் போவது என்று குற்ற உணர்வு பொங்கியவனாய் போகத் தயங்கினான் இரு தங்கைகளும் விடவே இல்லை. வலுவந்தமாக அழைத்து அண்ணா, தன் பிழையை உணர்ந்து மனம் வருந்தினாலே அவனுடைய பாவங்கள் மனனிக்கபபடும் என்று கிறிஸ்து பெருமான் கூறி இருக்கிறார் என்று கூறியவண்ணம் வீட்டினுள் மூவரும் அம்மா என்ற குரலுடன் நுழைகின்றார்கள்.

---

# கருத்துக் குவியல் 58

## காதல் கண்டிக்கப்பட வேண்டியதா?

உடன் எழுதி உங்கள் கருத்துக்களை மோத விடுங்கள்.

# குடும்ப டொக்டர் பதில் தருகிறார்

உங்கள் மருத்துவ உளவியல் கேள்விகளுக்கு ''நான்'' குடும்ப டொக்டர் பதில் தருகிறார்.'' உங்கள் மனக்குறைகளை நீங்கள் தீர்த்துக் கொள்ள உங்கள் சந்தேகங்களை எழுதி பயனடையுங்கள்.

— ஆர்

☐ இரண்டு மூன்று மாதத்திற்கு ஒரு முறை வாயில் புண் போன்று உள் பக்கத்தில் வருகின்றது இக் காலத்தில் உணவு அருந்துதல் கதைத்தல்கூட பெரும் வேதனையாக உள்ளது. அது தொடர்ந்து 20 நாளுக்கு மேல் வரையில் இருந்து மாறுகிறது. இவற்றை வராமல் தடுக்க முடியாதா? இவை ஏற்படுவதற்கான காரணம் என்ன? தீர வழி சொல்வீர்களா?

L. ரவி
கொழும்புத்துறை

● இவ்வாறு வாயில் புண்போடு வதற்கு 'அங்கலாய்ப்பு' நெருக்கடி நிலை, (Stress) பெருமபாலும் காரணமாக அமைகின்றது. மனதை ஒரு நிலைப் படுத்தி, அன்றட வேலைகளை ஒழுங்காக கிரம முறைப்படி செய்வதாலும், அல்லது உங்களுக்கு ஏதாவது பிரச்சினை இருப்பின் அதற்கு தீர்வுகாணுதல் மூலமாயும் மனதில் அமைதி அற்ற அங்கலாய்க்கும் தன்மை (Stress Condition) இல் இருந்து உங்களை விடுவித்துக் கொள்ளலாம். அதன் மூலம் இவ்வாறு புண்கள் ஏறபடுவதைக் தவிர்ககலாம்.

புண்கள் உள்ள வேளையில் 'BONJALA' cream உபயோகிக்கலாம்.

☐ சில சமயங்களில் மலத்தோடு இரத்தம் போகின்றது. இது எந்த நோயின் அறிகுறி? இதைக் கண்டு பயப்படும் எனக்கு நீங்கள் கூறும் ஆறுதல் என்ன?

S. சீலன்
பேசாலை.

● இவ்வாறு மலத்தோடு இரத்தம் போவது மூலவியாதி (Haemorrhoids) இன் தொடக்க நிலையாகும்.

உணவில் பப்பாசி, வாழை போன்ற பழவகைகளை சேர்த்தல், அதிக அளவு நீர் அருந்துதல் (நாளுக்கு 10 glass) ஏதாவது பானமாக அருந்தலாம். ஒழுங்கான முறையில் அதிக நேரம் கஷ்டப்

பாது மலம் கழித்தல் போன்றவற்றால் இந்நிலையைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

நோயின் ஆரம்ப நிலையிலேயே உரிய சிகிச்சை பெறுவதும் சிறந்தது.

☐ சீனியை முற்றாகத் தவிர்ப்பதனால் உடலுக்கு ஏதாவது தீங்கு உண்டாகுமா? கருப்பட்டி, சர்க்கரை, கற்கண்டு ஆகியவற்றில் உள்ள சீனித் தன்மையும் சீனியில் உள்ள சீனித்தன்மையும் ஒரே மாதிரியானதா?

G. பீற்றர்
சாவகச்சேரி.

●● சீனியை முற்றாகத் தவிர்ப்பதனால் உடலுக்கு தீங்கு உண்டாகும் என்றில்லை. சாதாரண சுகதேகி முற்றாகத் தவிர்க்க வேண்டும் என்பதுமில்லை. உடற் பருமன் உள்ளவர்கள் தவிர்ப்பதனால் பருமனைக் குறைக்கலாம்.

கருப்பட்டி, சர்க்கரை, கற்கண்டு என்பன சீனியை ஒத்தவையே. சலரோக நோயாளிகள் இவற்றில் எதனையும் உணவில் சேர்க்கக் கூடாது.

☐ எனது அக்காவின் கால் தொடையில் அடிக்கடி விறைப்பு ஏற்படுகிறது. சில வேளைகளில் உணர்ச்சி இல்லாமல் இருப்பது போல் இருக்கிறது. வைத்தியர்களிடம் காட்டியும் சுகம் கிடைக்கவில்லை. இதற்கு என்ன செய்ய வேண்டும் என்று தயவு செய்து விளக்கமாக கூறுங்கள்.

T. எவா
சண்டிலிப்பாய்.

●● விறைப்பு ஏற்படுவதற்கு பெரும்பாலும் நரம்பில் ஏற்படும் பாதிப்புக்கள் காரணமாய் அமைகின்றன. எனவே நரம்பு வைத்திய நிபுணரிடம் சிகிச்சை பெறுவது சிறந்தது.

அத்துடன் சில வேளைகளில் இவ்வாறு விறைப்பு உணர்ச்சி ஏற்படுவதற்கு உளவியல் (Psycho somatic) தாக்கங்களும் காரணமாக அமைகின்றது. இது சம்பந்தமாக மேலும் தகவல்களைப் பெறுவதற்கு கீழ்வரும் முகவரியில் நேரடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்:—

சாந்திகம்
உளவளத் துணை அகம்.
இல. 21, 1ம் குறுக்கு வீதி.
யாழ்ப்பாணம்.

☐ விபத்தில் ஏற்படும் இரத்தப் பெருக்கும் இரத்த தானம் செய்யும் போது ஏற்படுவதும் ஒரே நிலை எனக் கருதமுடியுமா? எத்தனை வயதுடையோர் இரத்த தானம் செய்யலாம். இதனால் உடலுக்கு தீங்கு ஏற்படுமா?

N. சாந்தன்
கல்முனை.

●● இரத்த தானம் செய்யும் போது ஒருவரின் நிறை, உடல் நிலை, என்பன பரிசோ

திக்கப்பட்ட பின்னரே இரத்த தானம் செய்வதற்கு அனுமதிக் கப்படுகின்றார். ஒருவரின் உடல் நிலையைப் பொறுத்து ஒரு பைந் வரையிலேயே இரத்தம் எடுக்கப் படுகின்றது.

விபத்துகளில் அவ்வாறு இல்லை. ஆனால் சாதாரண சுகதேகி ஒருவர் இரத்த தானத்தில் இழக்கும் அளவை இழப்பது ஆபத்தானது அல்ல. அதற்கு மேலும் இழக்கப் படும் போதே இழந்த அளவை ஈடுசெய்ய வேண்டி ஏற்படுகின்றது.

20–50 வயதுடையவர்கள் உடல் நிலையைப் பொறுத்து இரத்த தானம் செய்யலாம். இவ்வாறு இரத்த தானம் செய்வதால் உடலுக்கு எதுவித தீங்கும் ஏற்ப டாது. மாறாக உயர் இரத்த அமுக்கம், இதய நோயகள் என்பன ஏற்படுவதற்கான சந்தர்ப் பங்களும் குறைகின்றன.

☐ கர்ப்பமுற்றிருக்கும் எனக்கு உடம்பில் உள்ள நோய்கள் குழந் தைக்கும் வரும், அதனுல் குழந் தையின் வளர்ச்சி பாதிக்கப்படும் என பலரும் கூறுவதால் ஐயமுறு கின்றேன். இவை பற்றி உங்கள் ஆலோசனை என்ன?

(எனது நோய்கள்: தொய்வு, வாதம், கிரந்திக் கட்டி)

R. பற்றீசியா
கிளிநொச்சி.

● கற்பமுற்றிருக்கும் காலத்தில் மருநதுகள் உட்கொள்வதை இயலுமான வரையில் தவிர்த்தல் நல்லது. தொய்வு, கிரந்திக்கட்டி என்பன 'அலர்ஜி' ஆல் ஏற்படுவ தால் அலர்ஜிக்குரிய காரணங் களைத் தவிர்த்துக் கொள்வது சிறநததாகும்.

உ-ம் சில வகை உணவு, தூசு என்பன.

அதிகளவு கவலை, பயம் போன்ற உணர்ச்சிகளும் இநநோய்கள் அடிக் கடி ஏற்படுவதற்கு காரணமாகும்.

மருந்து உட்கொள்ளும் போது வைத்தியரின் ஆலோசனைப்படியே உட்கொள்ள வேண்டும்.

தொய்வு வியாதி பரம்பரையாக ஏற்படலாம். ஆனுல் எல்லாக் குழந்தைகளுக்கும் ஏற்படும் என்று கூறமுடியாது. ●

---

மனிதர்கள் தங்கள் தவறுகளைப் புரிந்து கொள்ளாத நிலையிலேயே இருக்கின்றனர். அவர்களின் தவறுகள் அவர்களுக்கே தெரிவதில்லை தங்களின் தவறுகளை வெறுத்து ஒதுக்காமல், அவைகளை நேசித்து வரு கின்றனர்.

— ரூஸோ

# அழகியல் – ஓர் அறிமுகம்

கலாநிதி சோ. கிருஷ்ணராஜா

66. பிரதியுரு செய்யும் கலைக்கும், வெளிப்படையான பிரதியுருவைச் செய்யாத கலைக்குமிடையிலான வேறுபாட்டைச் செய்வதெவ்வாறு? பிரதியுரு (Representation), வெளிப்பாடு (Expression) என்ற பதங்களின் பிரயோக மூலம் மேற்படி வேறுபாடு உணர்த்தப்படுகிறது. கலைகள் எத்தன்மையதாயினும் அவற்றிற்கு உள்ளடக்கம் அத்தியாவசியமானது. கலைக்குரிய உள்ளடக்கம் எங்கிருந்து பெறப்படுகிறதென ஒருவர் வினவலாம். நிச்சயமாக அவை கலைப்படைப்பிற்கு புறத்தேயுள்ளது. கலைஞன் தன் முயற்சியினால் அவ்வுள்ளடக்கத்தை கலையில் பொதித்தல் வேண்டும். கலையில் இத்தகைய முயற்சியை பிரதியுருவாக்கல் என்போம். வசீலி கண்டின்ஸ்கி (Wassly Kandinskey) என்ற அரூப ஓவியக் கலைஞன் (Abstract Artist) தனது பிற்கால ஓவியங்களிற் சில வெளியின் (Space) சாராம்சத்தை வெளிப்படுத்துகிறது எனக் கூறினார். இதே போல மொன்றீன் (P. Mondrian) என்ற டச்சு ஓவியன் தனது சில படைப்புக்கள் இசையை ஓவியமாக வெளிப்படுத்துகிறது என்கிறார். (கணேசதாசனின் ராகங்கள் பற்றிய ஓவியங்களும் இந்த உதாரணமாக எடுத்துக் காட்டப்படலாம்.) மேலே தரப்பட்ட உதாரணங்களில் "பிரதியுரு" என்பதற்கு இடமில்லை.

67. பிரதியுரு, வெளிப்பாடு என்பவற்றிற்கிடையிலான வேறுபாடுகளைப் புரிந்துகொள்வதற்குதவியாக விபரிப்பு வர்ணனை, வெளிப்பாட்டு வர்ணனை, என்ற சொற்களைப் பயன்படுத்தலாம். சாதாரண புகைப்படங்கள் விபரிப்பு வருணனையாகும். ஆனால் லியனார்டோ டாவின்சியின் மோனலிசா வெளிப்பாட்டு வருணனையாகும். ஒரு தரைத் தோற்றத்தின் புகைப்படத்தையும், அதே தரைத்தோற்ற ஓவியத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பின் விபரிப்பு வர்ணனைக்கும் வெளிப்பாட்டு வருணனைக்குமிடையிலான வேறுபாட்டைத் புரிந்து கொள்ளலாம்.

68. கலைகள் அழகியலாய்விற்குரியன என்று கூறும்பொழுது, அவை சாதாரண புகைப்படங்கள் போன்ற விபரிப்பு வர்ணனையைக் கொண்டவை என்ற அர்த்தத்தைத் தராது. ஏதோவொரு வகையில் வெளிப்பாட்டு வருணனையை உடையதாக இருத்தல் வேண்டும்.

## அழகியலாய்வில் இலக்கியம்

68. அழகியலாளர்கள் கவனத்தையீர்க்கும் முக்கிய துறைகளில் இலக்கியமும் ஒன்றாகும். இலக்கியத்தின் இயல்பு, இலக்கிய மொழி

என்பன தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் அழகியலில் குறிப் பிடத்தக்க முக்கியத்துவம் பெற்றனவாகும் அழகியலாளர்கள் இலக்கி யத்தை மூன்று பிரதான பிரிவுகளில் உள்ளடக்கியாராய்கின்றனர். அவையாவன கவிதை, கட்டுரை, புனைகதை என்பனவாகும். நாடகம், திரைப்படம் என்பனவும் பொதுவாக புனைகதைப் பிரிவிலேயே உள்ளடக் கப்படுவதுண்டு. நாடகம், திரைப்படம் என்று கூறும் பொழுது" முறையே நாடகப்பிரதி, திரைப்படச் சுவடி என்பனவே இங்த கருத்திற் கொள்ளப்படுகிறது.

69. உச்சரிப்பு முறை, குறியீடு, உருவகம் போன்ற மொழி உரு வமைப்பினடிப்படையில் கவிதையை ஏனைய பிறஇலக்கிய வகைகளி லிருந்து பிரித்தறிந்து கொள்ளலாம். புனைகதை தன்னியல்பில் கருத்து நிலைசார் விபரிப்பாக இருக்கும். கதாபாத்திரங்களின் செயற்பாடு, சம்பவ நிகழ்வு என்பனவற்றிலிருந்தும் அனுமானமாகப் பெறப்படும் தொனிப பொருளிலிருந்தும் புனைகதையை புனைகதை அல்லாதனவற்றி லிருநது பிரித்தறியலாம். கட்டுரையை இலக்கியமாகக் கொள்ளுத லென்பது அதன் விபரிபபுப் பாங்கான மொழிநடை அமைப்பிலிருநது பெறப்படும்,

70. எப்பிரிவிலடங்கும் இலக்கியமாயினும், அது மொழியினூடாக வெளிப்படுததபபடும் கலையாகும். கருத்து வெளிப்பாடு இலக்கியத்திற்கு மிக முக்கியமானது. கருத்தை வெளிப்படுத்தும் மொழியின் மிகச் சிறிய அலகு வாக்கியமாகும். சொற்கள் வாக்கியத்தின் பகுதிகளாம்.

71. மொழிவடிவிலமைந்த இலக்கிய வெளிப்பாட்டைப் புரிந்துகொள் வதற்கு வாக்கியங்களின் இயல்பு பற்றிய தெரிவு இன்றியமையாதது. வாக்கியங்கள் தகவற் பரிமாற்றம் செய்யுமியல்புடையன. எனினும், சில சநதர்ப்பங்களில் பிரகடன இயல்பு கொண்டவையாயும், ஏவல் இயல்பு கொண்டனவாயும், இருத்தல் கூடும்.

72. தகவற் - பரிமாற்றமென்பது சுவைஞனைப் பாதிக்குமியல் புடையது. இது கருத்து ரீதியான பாதிப்பு, உணர்ச்சி ரீதியான பாதிப் பென இரு வகைப்படும்.

73. உணர்ச்சியம்சத்தை அடிப்படையாகக் கொண்டதே இலக்கிய மென "இலக்கியத்தை" விளக்க முயலுபவர்கள், தமது கருத்திற்காதர வாய் கவிதையை எடுத்துக் காட்டுவர். கவிதைக்குரிய வரைவிலக்கணம் பொதுவாக உணர்ச்சியம்சத்தை அடிப்படையாகக் கொண்டே செய்யப் படுவதுண்டு. எனினும் உணர்ச்சி வெளிப்பாடு கவிதைக்குரிய திருப்தி கரமான வரைவிலக்கணமாகாது. ஏனெனில் இலக்கியத்தின் உணர்ச்சி

வெளிப்பாடு எப்பொழுதும் உணர்ச்சிசார் உட்பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும். உணர்ச்சிசார் உட்பொருள் இல்லாவிடத்து சுவைஞன் எவ்வாறு இலக்கியமொன்றின் உணர்ச்சி வெளிப்பாட்டைப் புரிந்துகொள்ளலாம்? உணர்ச்சிசார் உட்பொருளிலிருந்தே இலக்கியத்தின் உணர்ச்சி வெளிப்பாடு பெறப்படுகிறது. அதாவது பின்னது முன்னதிற் தங்கியுள்ளது.

74. இலக்கியம் பற்றிய உணர்ச்சி வெளிப்பாட்டுக் கொள்கைக்குப் பதிலாக, இலக்கியத்தை, அது வெளியிடும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்க முயலுவோர் வெளிப்படையான கருத்து உட்கிடையான கருத்து என இருவகையான கருததுக்களை இலக்கியங்கள் கொண்டிருக்குமென எடுத்துக்காட்டுகின்றனர்.

75. வெளிப்படையான கருத்து, உட்கிடையான கருத்து என்பன முறையே முதல் நிலைக்கருத்து, வழிநிலைக்கருத்து என அழைக்கப்படும். பிரகடன இயல்புகொண்ட வாக்கியங்களின் நேர்ப்பொருளே (அர்த்தம்) முதல் நிலைக்கருத்தாகும் தொனிப்பொருள் வழிநிலைக் கருத்தாகும். சில சந்தர்ப்பங்களில் மேற்படி வாக்கியங்கள் வெளியிடும் நோக்கருத்து ஒன்றாகவும், தொனிபொருள் வேறொன்றாகவும் இருத்தல சாத்தியம. X என்பவள் Y யிலும் பார்க்க அழகானவள் என்ற வாக்கியமும, Y என்பவள் X இலும பார்க்க அழகற்றவள் என்ற வாக்கியமும வெளிப்படுத்தும் கருத்து ஒன்றேயெனினும், இவ்விரு வாக்கியங்களின் தொனிப்பொருளும் வித்தியாசமானதாகும்.

76. இலக்கியம் பற்றிய அழகியலாய்வில் தொனிப்பொருள் முதன்மைபெறும் ஓரம்சமாகும். பல்வகைத்தான படிமங்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கது ஒரு கவிதையில் இடம்பெறும் சொற்றொடர்கள் எத்தகைய அர்த்தத்தைக (கருத்தைக) கொண்டிருந்தாலும, வாக்கிய அமைப்பு, தொடர் ஒழுங்கு என்பன குறிப்பாலுணர்த்தும தொனிப்பொருளும அக் கவிதை பற்றிய ஆய்வில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. உருவமாகவும், வஞ்சப் புகழ்ச்சியாகவும் வருகிற வாக்கியங்களில் இருவகைக் கருததுக்களும் இடம்பெறுவதை அவதானிக்கலாம்.

77. மொழியடிப்படையில் இலக்கியத்தை வரையறுக்க முயலாது, இலக்கியம் முன்னிலைப்படுத்தும் உலகம் என்பதனடிப்படையிலும் அதனை விளக்குதல் கூடும். கரு, கதாபாத்திரஙகள, என்பவற்றின் துணையுடன் மனித இயல்பைப் பிரதிபலிக்கும் நடத்தைக் கோலங்களாகவும் இலக்கியத்தை விளக்கலாம்.

78. இலக்கியம் தரும் அனுபவம் ஏனைய பிற அனுபவங்களிலிருந்து வேறுபட்டதென்பதாலும், குறிப்பாலும், தொனியாலும்

நான் 38

மட்டுமே உணர்த்தப்படக்கூடிய ஆழமான கருத்தை இலக்கியங்கள் கொண்டுள என்பதாலும், அவற்றை விரித்துரைத்தல் இன்றியமையாத தென வாதிடப்படுவதுண்டு.

79. ஓர் இலக்கியத்தை / கவிதையை விரித்துரைத்தலென்பது அதன் அர்த்தத்தைத் தேடுதலாகும். இலக்கிய நயம் கருதியே இத் தேடல் மேற்கொள்ளப்படுகிறது. ஒரு கவிதை பற்றி உரையாசிரியனின் எண் ணிறந்த வாக்கியங்களை மொழிதல் கூடும். எனினும் அவையனைத்தை யும் நியாயப்படுத்தக்கூடிய வகையில் ஆதாரங்களைத் தருதல் இலகு வானதல்ல.

80. இலக்கியத்தில் விரித்துரைத்தலின் அவசியத்தை வற்புறுத்து பவர்களின் அபிப்பிராயப்படி இலக்கியங்கள் குறிப்பாலுணர்த்தும் பொருளை சந்தர்ப்ப தொடர்பினடிப்படையிலேயே கண்டறிதல் வேண்டும். ஆனால் இத்தகைய முறையின் ஏற்புடைமை பற்றி ஐயுறலாம் சார்பற்ற முறையில் இலக்கியங்களை விரித்துரைத்தல் இயலாது. குறிப்பாலுணர்த் தப்படுவது ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ஒருவனின் அனுபவத்தி லிருந்து பெறப்படுவதே ஒழிய, சொல் பொதுவாகக் குறிப்பாலுணர்த் துவதென ஒன்றில்லை. அதாவது குறிப்பாலுணர்த்துவதென்பது தனி யான் அனுபவத்திலிருந்து பிரிக்க முடியாததினால், விரித்துரைத்தல் சார்பு நிலையானதே என வாதிடலாம்.

விரித்துரைத்தல் சார்பு நிலைக்குரியதாயிருப்பதனால் அதனை நிராக ரித்தல் வேண்டுமென வாதிடுவது முற்றிலும் ஏற்புடையதல்ல. உதா ரணமாக பாலைவனம் என்ற சொல் அகராதியில் ஒரு கருத்தைக் கொண்டிருக்கலாம். எனினும் இலக்கியத்தில் அகராதிக் கருத்தை விட வேறு கருத்துக்களையும் குறிப்பாலுணர்த்த பயன்படுத்தலாம். ''எதிர் பார்ப்பின்மை'', ''பிரயோசனமின்மை'', வெறுமை போன்ற கருத்துக் களையும் குறிப்பாலுணர்த்த பாலைவனம் என்ற சொல்லைப் பயன்படுத் தலாம் சுவைஞன் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் இலக்கியத்தின் தொனிப்பொருளை உணரத் தவறினும், அவன் தனது இலக்கியப் பரிச் சயத்தை மேம்படுத்துவது மூலம் தொனிப் பொருளமைப்பைக் கண்டு கொள்ளலாம்.

81. இலக்கியம் பற்றிய அழகியலாய்வில் குறிப்பிடத்தக்க பிறி தொரு விடயம் உருவகக் கோட்பாடு பற்றியதாகும். மூன்று வகை யான உருவகக் கோட்பாடுகள் பற்றி அழகியலாளர்கள் பேசுகின்றனர்.

82. உருவகக் கோட்பாட்டின் முதலாவது வகை உணர்ச்சிக் கொள் கையினரின் கருத்தாகும். இவர்களது அபிப்பிராயப்படி உருவகசொற்

39 நான்

கோவை அசாதாரணக் கருத்தைக் கொண்டிருக்கும். மொழியின் மிகைப் படுத்தப்பட்ட பயன்பாட்டினால் இது உருவாக்கப்படுகிறது. உதாரணம் வெளிச்ச விழுதுகள் (டானியல் அன்ரனியின் சிறுகதைத் தொகுதி "வலை") உருவகத்தின் தார்ப்பரியம் சொல்லின் நேரடிக் கருத்தாகாது அம்பு என்ற சொல் ஒரு கருவியைச் சுட்டினும், சொல்லம்பு என்ற இணைப்பில் வரும் பொழுது உணர்ச்சிக் கருததிலேயே பயன்படுத்தப் படுகிறது.

83. உருவகம் பற்றிய உணர்ச்சிக் கொள்கையினரின் கருத்தை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொருத்தமான விளக்கமாக ஏற்றுக்கொள்ள முடியாது. "அம்புபோல் விரைந்த சென்ற வண்டி" என்பதில் உணர்ச்சிக் கருத்தெதுவுமிருப்பதாகத் தெரியவில்லை.

84. உருவகம் பற்றிய இரண்டாவது கொள்கையின்படி, இலக்கிய மொழியினால் உணர்த்தப்பட முடியாத கருத்தை சுவைஞனுக்கு உணர்த்தவே உருவகம் பயன்படுகிறது. ஐதிகங்களிலும், கிரியைகளிலும் இடம் பெறும செயல்களில் இயற்கைக்கப்பாற்பட்ட 7 விடயங்களை மனிதர்க்கு உணர்த்தும் முறையாக உருவகம் விளங்குகிறது. இலக்கியத்தில் இடம் பெறும் உருவகங்கள் இயற்கை மொழியின் கருத்தைக் கொண்டுள்ளதல்ல. மொழிகசபபாற்பட்ட மூலததிலிருந்து பெறப்படுதல் வேண்டும. எவ்வாறு குறிபபிட்டதொரு மொழியில் பரிச்சயமில்லாதவர் இலக்கணத்தையும், அகராதியையும் வைத்துக் கொண்டு எல்லாச் சொற்களையும் சரியான முறையிற் பயன்படுத்த முடியாதோ, அவ்வாறே உருவகமும் பண்பாட்டின் தொடர்பின்றி விளங்கிக்கொள்ள முடியாததாகும்.

85 இலக்கியத்திற் பயன்படும் உருவத்திற்கு சொல் குறிக்கும் நேர்பொருளிலிருந்தே கருத்தைத் தேடுதல வேண்டுமென மூன்றாவது கொள்கை எடுத்துக் கூறுகிறது. இவர்களது அபிப்பிராயப்படி உருவகம் ஒரு எளிமையான ஒப்பீடாகும்.

உதாரணம்:–

ஒரு தீக்குச்சியின் மரணத்தைப் போல
நீ
மறைந்து போனாய்
(வாசுதேவன் "என்னில் விழும் நாள்" கவிதைத் தொகுப்பு, பக். 21)

இளவயதில் இறந்துபோன நண்பனும் விரைவில் எரிந்து முடிந்த தீக்குச்சியும் ஒருசில அம்சங்களில் ஒற்றுமைப்பட்டிருக்கின்றது.

X என்பது "Y" ஒத்திருக்கிறதெனும் பொழுது எந்த வகைய விதத்தில் ஒத்திருக்கிறதென எடுத்துக் காட்டல் வேண்டும். அவ்வாறு எடுத்துக் காட்டுவதன் மூலம் உருவத்தின் கருத்தை விளங்கிக் கொள்ளலாமென இக் கொள்கையாளர் எடுத்துக் காட்டுவர்.

# 'நான்' கருத்தரங்குகள்

இளைஞர் யுவதிகளுக்காக உளவளர்ச்சிக் கருத்தரங்குகள் 'நான்' ஆசிரியர் குழுவினரால் கீழ்க்காணும் பகுதியினருடன் இணைந்து நடைபெற வுள்ளது.

7-10-89 மு. ப. 9-00 புனித யுவானியார் கோவில்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

14-10-89 மு. ப. 9-00 ஆண்கள் கிராம முன்னேற்றச் சங்கம், பண்ணாகம்.

21-10-89 மு. ப. 9-00 கல்யாண மண்டபம்,
பாஷையூர்.

28-10-89 பி. ப. 9-00 புனித யாகப்பர் கோவில், குருநகர்.

4-11-89 மு. ப. 9-00 புனித மரியாள் ஆலயம், கோப்பாய்.

மு. கு. அவ்வப் பகுதிக்குரிய 'நான்' சந்தாக்காரரையும், சந்தாக்காரராக சேர விரும்புவோரையும் மேற்படி கருத்தரங்குகளில் பங்குபற்றுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

*நான் ஓராண்டு சந்தா ரூபா 25/-*
*நான் வெளியீடுகள் விற்பனைக்குண்டு.*

கலாநிதி சோ. கிருஸ்ணராஜாவின்
'விமர்சன மெய்யியல்' ரூபா 15/-

வி. பி. யின்
'80 இலிருந்து 88 வரை' ரூபா 15/-

✳ புதுக்குடியிருப்புப் பங்குத் தந்தை அருட் திரு. ஜெயரட்ணம் அடிகளாரினதும் சகோதரன் அ. அகஸ்ரினதும் முயற்சியின் விளைவாக 08-9-89 அன்று "நான்" உளவியல மஞ்சரியினரால் கருத்தரங்கு புதுக்குடியிருப்பு றோ. க. பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இக் கருத்தரங்கிற்கு தலைமை தாங்கி வரவேற்புரை நிகழ்த்திய பங்குத் தந்தை கருத்துரை வழங்க வருகை தந்த "நான்" ஆசிரியரையும், அருட்சகோதரன் லொசிங்ரன் அவர்களையும் அறிமுகம் செய்துவைத்தார்.

✳ ஆளுமை வளர்ச்சி, சமூக சீர்திருத்தம் பற்றிய கருத்துக்கள் இக் கருத்தரங்கில் முன் வைக்கபபட்டன.

✳ சுமைதாங்கி, ஆசிரியர் கருத்துரை, கருத்துக்குவியல், உளவியல் பாடம் போன்றவற்றை வெகுவாகப் பாராட்டியும், நான் மஞ்சரி மாதத் திற்கொருமுறை மலரவும், இப்பகுதி எழுத்தாளர்களுக்குப் போதுமான ஊக்குவிப்பளித்துதவ வேண்டும் என்றும் இளைஞர்களால் வேண்டுகோள் விடப்பட்டது.

✳ இரண்டு நான் வட்டங்கள உருவாக்கப்பட்டன.

1. இரணைப்பாலை நான் வட்டம், (இரணைப்பாலை, வலையன் மடம், மாத்தளன், ஆனந்தபுரம்.)

2. புதுக்குடியிருப்பு நான் வட்டம். (புதுக்குடியிருப்பு. திருமுகபுரம்.)

✳ இக்கருத்தரங்கிற்கு இப்பகுதியிலுள்ள 65றகு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டனர். இறுதியாக நன்றியுரையுடனும் இறைவணக்கத்துடனும் கருத்தரங்கு இனிது நிறைவுற்றது.

தகவல்: இரணையூர் ரட்ணம்

---

● புதுக்குடியிருப்பு நான் வட்டம்
பொறுப்பாளர்: ஜீவராணி புனிதா, இருதயராணி

● சாவகச்சேரி நான் வட்டம்
பொறுப்பாளர்: தர்மினி

● இரணைப்பாலை நான் வட்டம்
பொறுப்பாளர்: M R K. ரட்ணராஜா, S. அமிர்தநாதர்

● பாஷையூர் நான் வட்டம்
பொறுப்பாளர்: மலர் சிங்கராயர்

---

## வாழ நினைத்தால் வாழலாம்

- கலைநேசன் சிவம்

வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் ஏசுகின்ற,
வையகம் இதுவன்றோ அறிவோம் நாமே.
வையகத்தை நினைந்து நாம் வருந்தலானால்,
வாழ்வதற்கு இப்பிறப்பில் காலமேது
நமக்கென்று ஒருநோக்கு இருக்கவேண்டும்,
நாமதிலே திடங்கொண்டு வாழவேண்டும்
மனம் விரும்பும் வாழ்வு நமக்கில்லையெனில்,
மானிடராய்ப் பிறப்பதில்தான் அர்த்தமேது.
துன்பங்கள் துயரங்கள் எவர்க்குமுண்டு,
துணிவுடனே அதை ஏற்றால் வெற்றியுண்டு.
தோல்வியின் எல்லையிலே வெற்றிகண்டு,
தோன்றி மறைந்தோர் பாரில் நிறையவுண்டு.
வருவதெல்லாம் வரட்டும் என வீரங்கொண்டு,
வாழ நினைத்தால் வாழலாம் பாரில் இன்று!



## மேலே நாட்டவரைப் போல், எமது நாட்டு ஆண்களும், பெண்களும் நட்புறவு கொள்வது...

விரும்பத்தக்கது 1.

நட்புறவு கொள்வது எதுவிதத்திலும் தீங்கல்ல, உளவியல் ரீதியாகப் பார்க்குமிடத்து நட்புறவு கொள்வது சாலச்சிறந்ததாகும். எமது நாட்டில், மேலேநாட்டவரைப் போல் நட்புறவு கொண்டால், வயது வித்தியாசமின்றி இரு பாலாரும் எண்ணப் பரிமாற்றம், கருத்துப்பரிமாற்றம் செய்து கொள்ள நேரிடும் இப்பரிமாற்றங்கள் ஒருவரையொருவர் அறிந்துகொள்ள முடிகிறது. இப்புரிந்துணர்வு பல வழிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. விழிப்புணர்வு, புரிந்துணர்வு இருபாலாரையும் பலவிஷயங்களில் கருத்தொருமித்தவர்களாக இருக்கச் செய்கிறது.

இளவயதினராய் இருந்து நட்புறவு கொண்டு, பின்பு காதலாகி கல்யாணம்வரை செல்லுமாயின், எதுவித பிரச்சனைகளிற்கும் முகம் கொடுத்து, நிதானித்து, தமது சொந்தக் காலில் நிற்கும் துணிவு கிடைத்து, இன்பமான இல்லற வாழ்க்கையை அமைக்க ஏதுகோலாக இருக்கும். வயது வந்தவர்களாக இருப்பார்களேயானால் வாழ்க்கைப் பிரச்சனைகளை மிகவும் அலசி ஆராய வாய்ப்புண்டு. முக்கியமாக பொருளாதார, பாலியல் பிரச்சனைகளை ஒத்த பாலாரின் நட்பைவிட, எதிர் பாலாரினது நட்புறவே சுலபமாக ஆழமாக தீர்த்துவைக்க வழி சமைக்கும்.

ஒருபோதும் குறுகிய மனோபாவத்துடன் எதிர்பாலாரது நட்புறவை பார்க்கக்கூடாது. அந்த நட்புறவைக் கொள்ளும் இருபாலாரும், எந்த வயதினராக இருப்பினும் குறுகிய சிறு நோக்கங்களை மனதில் வைத்து நட்புறவு கொள்வது எதுவிதத்திலும் நன்றன்று அப்படி நினைப்பவர்கள், பார்ப்பவர்கள், செயற்டுபவர்கள் குறுகிய மனப்பான்மையுடைய, பிறபோக்குச் சிந்தனையுள்ள அற்பவாதிகளாகும்.

பால்வித்தியாசமான நட்புகள்,

43 நாள்

உளவியல் ரீதியாக நிறைய செயல்களைப் புரிகின்றனர். உதாரணத்திற்கு தாழ்வு மனப்பான்மை பயம் உடைய ஆணோ அல்லது பெண்ணோ, அவர்களுக்குரிய எதிர்பாலாருடன் கல்வி, விளையாட்டு, வேறு எது விதத்திலும் பழகி செயல்படும் போது ஓர் அற்புதமான உற்சாகத்தை அளிக்கின்றது. அவ் உற்சாகம் அவரவரது முயற்சிக்கு, ஆற்றல்களிற்கு மெருகூட்டி, நிறைய சாதனைகளை நாட்ட உதவுகின்றது. எதுவிதத்திலும் ஆண்/பெண் நட்புறவு சிறந்தது. மேலை நாட்டினாது பல சாதனைகளிற்கு, இந்த பால் வேறுபாடான நட்புணர்வு பெரும் பங்கு வகிக்கின்றதென்பதை, உளவியல் ரீதியாக ஆராயுமிடத்து நன்கு புலப்படும். ஆகவே எமது நாட்டவரும், குறுகிய நோக்கத்தோடு இவ் நட்பைப் பார்க்காது, நன்கு கருத்தொருமித்த நட்புணர்வை இருபாலாரும் பகிர்ந்து பல சாதனைகளைப் படைப்போம்!

ச. இராமச்சந்திரன்,
கபவெட்டி.

**விரும்பத்தக்கது 2.**

இறைவனின் படைப்புக்கள் அனைத்திலும் சிறந்தவனாகவும், அனைத்தையும் அடக்கி ஆள்பவனாகவும், பல்வேறுபட்ட ஆற்றல் படைத்தவனாகவும் திகழுபவன் மனிதனே. அத்தகைய மனிதன் தனியே ஒதுங்கி வாழ்வதோ, அன்றி மற்றவர்களுடன் நட்புறவு கொள்ளத் தயங்குவதோ பொருத்தமானதொன்றல்ல. காரணம் அவன் ஒரு சமூகப் பிராணி. எனவே தான் நவீன யுகத்தின் வீர புருஷர்களாகிய ஆண்களும், அதே வேகத்தில் இயங்கி வரும் பெண்களும் சரிநிகராகப் பழகுவதும், நட்புறவு கொள்வதும் வரவேற்கக்கூடிய விடயங்களேயாகும்.

உண்மையான அன்பில் உருவாகும் நட்புறவிற்கு ஆண், பெண் பேதமோ, சாதி, மத வேறுபாடோ, வயது வித்தியாசமோ தடையானதொன்றல்ல. இன்றைய உலகின் எத்துறையை நோக்கினும் ஆண்கள் வகிக்கும் அத்தனை பதவிகளையும் பொறுப்புக்களையும் பெண்களும் மிகுந்த விழிப்புணர்வுடன் ஏற்றுச் சிறப்பாகச் செயலாற்றுகின்றனர். இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றங்கள் செய்வதும், சல்லாபிப்பதும் பொழுதுபோக்கிற்காகவும், மகிழ்ச்சிக்காகவும் அரட்டை அடிப்பதும் தவிர்க்க முடியாதவை.

இத்தகைய செயல்களினால் எமது பண்பாடு சீரழிகிறது என்றோ, பெண்கள் பேசாமடந்தைகளாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பதோ மிகவும் பிற்போக்கான கருத்தென்றே நான் எண்ணுகிறேன். ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்கும், அதன்மூலம் தமக்குப் பொருத்தமான துணையை இரு பாலாரும் தேர்ந்தெடுக்கவும், மனம் விட்டுப் பேசி மகிழ்ச்சியான மண வாழ்வை அமைத்துக் கொள்ளவும் மேலை நாட்டவரைப் போன்று எமது நாட்டு ஆண்களும், பெண்களும்

நட்புறவு கொள்வது விரும்பத் தக்கது. உள்ளத்தின் அடியில் ஆழமான கனவுகளையும், கற்பனைகளையும் வளர்த்துக்கொண்டு சமுதாயத்திற்குப் பயந்து வாழும் பயந்தாங் கொள்ளிகளின் ஆசைகள் ஊமை கண்ட கனவுபோலாவதைத் தடுப்பதற்கு இத்தகைய உறவுகள் பயனுள்ளதாக அமையும்.

மேலைத்தேய நாடுகளில் இன்று பரவலாக வாழும் எம்மினம் அவர்களின் மொழி மதம், தொழில் போன்ற பல்வேறு அம்சங்களைப் பின்பற்றும்போது அவர்களைப்போல ஆண்களும் பெண்களும் நட்புறவு கொள்வதில் மட்டும் என்ன தவறிருக்க முடியும்? ஒருவரைப் பற்றிய தப்பான எண்ணங்கள், பிழையான புரிந்துணர்வுகள், வெறுப்புணர்ச்சிகள் போன்றவற்றை ஆண்களும், பெண்களும் மனம்விட்டுப் பேசி மகிழ்வதாலும், நெருங்கிப்பழகுவதனாலும் தீர்த்துக்கொள்ளலாம்.

கே. ரீ. தாஸ்
வவுனியா.

விரும்பத்தகாதது 1,

வெளிநாட்டவரைப் போன்று ஒரு ஆடையைப் போட்டுவிட்டு, அது பொருந்தவில்லை என்றவுடன் மறு ஆடை மாற்றுவதுபோல, ஆண்கள் பெண்களையும், பெண்கள் ஆண்களையும் விவாகரத்து, மறுமணம். இதுவா எம் பண்பாடு? அவர்களுக்கும் எமக்கும் காத தூரம். அவர்களுக்கு, அநாகரிகம் என்றால் எங்களுக்கு அதுதான் நாகரிகம். அதே போல், எமக்கு அவர்கள் செயல் அநாகரீகம் என்றால் அதுதான் அவர்களுக்கு நாகரிகம். எனவே, எம் பண்பாடும், அவர்கள் பண்பாடும் ஒத்துவரக்கூடிய ஒன்றா? நிச்சயமாக வராது. வரவும் கூடாது.

வெளி நாட்டவர் எம்முறையில் பழகினாலும், அதற்குத் தடை விதிக்கவோ, அவர்களைபபற்றிப பேசவோ எவருமேயில்லை. ஆனால், எமது சமூகத்தை எடுத்துக் கொண்டால் அப்பப்பா... எங்கேயென்றிருப்பார்கள் சிலர். ஒரு பெண்ணைபபற்றியோ, ஆணைப்பற்றியோ, சிறு விடயம் அறிந்திருந்தாலும் ஊர் முழுவதுமே அச் செய்தியைப் பரபபிவிடுவர். மனிதர்களாகப் பிறந்த நாம், அதிலும் விசேடமாகத் தமிழர்களாகப் பிறந்த நாம் கட்டுப்பாடு என்ற சிறைக்குள்தான் எம் வாழ்வைக் கழிக்க வேண்டும். வெளியேற நினைப்பது பெரும் தவறு. கட்டுப்பாடு அதாவது "சமூக ஏற்பாடு" இதை அனுசரித்து நடத்த வேண்டும். எம் மூதாதையரின் பொன்னான கூற்றுக்களை நினைவுபடுத்தி வாழ வேண்டும். அவர்கள் ஆணுக்குப் பெண் சரிநிகரானவள். ஆணும், பெண்ணும் எவ்வாறும வாழலாம், என்று எநநிலையிலும கூறவில்லை.

வெளி நாட்டவரைப் போன்று நாமும வாழ நினைததால் அது முடியாத காரியம். வெளி நாட்டவரின் தாய் மொழியின் சிறப்பு அவர்களின் நடவடிக்கைகளில் புல

ளுகிறது. அதேபோல், எமது தாய் மொழியின் கோட்பாடுகள், தனித்துவம் அனைத்துமே எம் நடத்தையிலே தங்கியிருக்கிறது. எனவே, இத் தமிழ் மண்ணிலே எம் உயிர்ப் பூக்கள உதிரும் வரை அத தமிழ் மொழிக்குரிய மதிப்பையும், மரியாதையையும் அளிக்க நாம் தயங்கவே கூடாது. ஆகையால், மேலை நாடடவரைப போன்று எம் நாட்டு ஆணகளும், பெண்களும் நட்புறவு கொளவது விரும்பத்தகாதது என்பதையே நான் வலியுறுத்திக் கூறுகிறேன்.

என். என். குணரட்ணம்,
வவுனியா.

விரும்பத்தகாதது 2.

நட்புறவா! அது வாழ்வில் தேடித் தெரிந்து எடுக்க வேண்டிய புதை பொருள். கிடைத்தவர் வாழ்வில் ஆனந்தக் குளியல் தான். இதிலும் காதல் என்ற கருத்தில் இருவருக்குள் ஏற்படும் நட்புறவை விட குழுவாக கூட்டமாக ஆண்களும் பெண்களும் நட்புறவு கொள்வது நன்று எனலாம்.

ஆனால் மேலை நாட்டவர் போல் நம் நாட்டில் இருபாலாரும் நட்புறவு கொள்வது என்பது மேல் நாட்டில் குளிருக்காக போடும் ஆடையை நமது நாட்டில் கோடையில் ஸ்ரைலுக்காய் போட்டால் நாம் தேடிய பொருள் நம்மையே அழிபபது போல், வெப்பத்தில் அவித்து விடும், ஒவ்வொரு மனிதனுக்கும் புறம்பான தனித்துவமான செயல் குணம் நிட்சயம் உண்டு, அது போன்று, எமது நாட்டிலும் கலாச்சாரம், பண்பாடு என்று உண்டு. உடல் கவர்ச்சிக்காக உணவுதரும்போது, பெற்றவர்கள் உளவளர்ச்சி பெற பழக்க வழக்கங்களையும் ஒரு கட்டுப்பாட்டுக்குள நிலைநிறுத்தியுள்ளனர். இதை மீறி வாழவேண்டும் எனப் பேசலாம் ஆனால் செயல்படுத்த முடியாது, எமது சமூகம் அதை ஏற்காது. பிற ஆணுடனோ பெண்ணுடனோ அன்பாகக் கதைத்த மறுநாளே மூன்றெழுத்தால் முத்திரை ஒட்டும் சமூகத்தில் மேலை நாட்டவர் போல், ஆடவும். பாடவும் பிரிய மாணவர்கள் வீடுசென்று விருந்துபசாரம் செய்யவும் மிகவும் நெருங்கிய நண்பர்களை முததமிடவும் மது அருந்தி மயங்கிக் கிடக்கவும் நாம் முயலக் கூடாது. இப்படியான செயல்கள் நமது நாட்டிற்கு ஒத்துவராதவையே, நட்புறவு கொள்வது தப்பில்லை. எமது நாட்டின் பண்பாட்டு வழியே நட்போடு பழகுவோம். மேலை நாட்டவர் போல் பழகுவது, எமக்குத் தகாததே. நாம் நாமாகவும் நமது நாட்டுப் பண்பாட்டோடும் ஒன்றுபட்டு வாழுவோம்.

A. J. ஆனந்தி,
கூழாவடி.

பாராட்டப்படுவோர்:

பிறேம் யூடித் - யாழ்,
மரியாம்பிள்ளை சகாயமலர்
சலமோன் சகாயமலர்
நெடுந்தீவு.

# எப்போது மாறுவாய்?

வாழ்க்கையில் வரலாறு படைக்க வேண்டிய — நீ
இன்று மதி மயக்கத்தில் அலைகின்றாய்.

இளமையில் சேவை ஆற்றவேண்டிய — நீ
ஆடி ஓய்ந்த பம்பரமாய் நிற்கின்றாய்.

மனித குலத்தை மாற்ற வேண்டிய — நீ
மனித குலத்தை கொல்ல நினைக்கின்றாய்.

பிறருக்கு பகிர்ந்து அளிக்க வேண்டிய — நீ
பிறர் பொருட்களை கொள்ளையிட முற்படுகின்றாய்.

புது மனிதனாக மாறவேண்டிய – நீ
காட்டு மிராண்டி போல் வாழ்கின்றாய்.

புது உலகம் படைக்கவேண்டிய — நீ
அதை அமைப்போரை விரைவில் வீழ்த்துகின்றாய்.

பூவையும் மஞ்சளையும் காப்பாற்ற வேண்டிய — நீ
விதவை கோலத்தை அணைக்க சொல்லுகின்றாய்.

தர்மத்தின் தலைவனாக வாழ வேண்டிய — நீ
அதர்மம் காக்கும் தலைவனாக மாறுகின்றாய்.

இவ்வளவு கூறியும் மாறவேண்டிய — நீ
ஏன் இன்னும் மாறாமல் இருக்கின்றாய்?

அ. றெனி
பாஷையூர்

---

❀ சோவியத் ஆர்மேனியாவில் ஏற்பட்ட நில நடுக்கத்தினால் கட்டிடத்தின் இடிபாடுகளுக்கிடையில் இருந்து ஒரு மாதத்துக்குப் பிறகு சிலர் காப்பாற்றப்பட்டதற்குக்காரணம் உணவும், பானமும் மட்டுமல்ல ''நாம் காப்பாற்றப் படுவோம்'' என்ற நம்பிக்கையுமாகும்.

# வாசகர் பூங்கா

**நின் அழகு**

உன் —
கருங் கூந்தலில்,
உரசி வரும் காற்றினை,
நுகர்ந்தால் —
சுவர்க்கத்தின் வாசனையே
துச்சமாகிறது!

காதலியே! "நான்" கன்னி
கையே!

உன் அழகு நதி —
என்றும் வற்றாத
ஜீவ நதியாக புரண்டு ஓடிட
வாழ்த்துக்கள் சொரிகின்றேன்

R. டெனிசியா
யாழ்ப்பாணம்.

**நம்பிக்கை**

"நான்" எம்மை வளர்த்து, நிதானிக்க வைக்கும் ஓர் அறிவுப் பெட்டகம், நம்பிக்கை என்பது வாழ்வின் சொத்துக்களில் ஒன்று. அந்த "நம்பிக்கை"யை, என்றும் நான எமக்கு வழங்கும் என்ற நம்பிக்கையுடன் "நான்" இன் உன்னதமான வளர்ச்சிக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வனஜா, செல்வி, ரதி, ராணி.
கரவெட்டி

**அட்டைப்படம்**

வைகாசி ஆனி "நான்" மஞ்சரியின் அட்டைப்படம் வெகு ஜோர்! நமது மண்ணில் லோங் அடிகளாரின் அன்புப் பணியை எனக்கு நினைவூட்டுவதாய் அமைந்துள்ளது. கட்டுரைகளையும் வாசித்து மகிழ்ந்தேன்.

J. வில்சன் ஆனந்தன்
லண்டன்

**அரிய வாய்ப்பு**

89 = 3 – ம் இதழ் என்னை மிகவும் கவர்ந்தது இபபடித் தரமான ஓர் சஞ்சிகையை வாசிக்கும் வாய்பபு கிடைதததை எண்ணி மகிழ்ச்சி. பாமரர் முதல் பல்கலைக் கழகம் வரையிலுள்ள அனைவருக்கும் ஏற்றவாறு "நான்" மலர்வது கண்டு மகிழ்வடைகின்றேன்.

M. டேவிட்
பாரிஸ்

**மாதமும் மலர ...**

இன்றைய காலத்தில் விமர்சனம் சர்சைக் குரியதாக இருந்தும் அதற்கு விளக்கம் தரமுனைந்த சோ. கிருஸ்ணராஜாவின் அழகியல் ஓர் அறிமுக கட்டுரை விளக்கம் எமக்கு நல்ல விளிப்பைத் தந்தது.

எத்தரத்தினரும் புரியக் கூடியது என்பதற்காக எழுத்துக்களை இலகுபடுத்தாது அத்தரத்துக்கு நாமும் உயரவேண்டும் என்பதனை கற்பிக்கும் "நான்" மாதமும் மலர்ந்தால் பாடசாலை மாணவரும், பாமர மக்களும் நல்ல பயன் பெற வாய்ப்புண்டு. 15 - வது ஆண்டில் அந்த நல்ல செய்தி கிடைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

R. தவராசா
திருமலை

''நான்' தரும் இன்பம் நாம் பெறும் சொர்க்கம்'

தரமான பொருட்கள் நியாயமான விலையில் பெற

## நாடுங்கள்

# வீரசிங்கம் ஸ்ரோர்ஸ்

★ பலசரக்கு மாளிகை, ★ கட்டிடப் பொருட்கள்
★ இரும்புச் சாமான்கள் ★ பெயின்ற் வகைகள்
★ பத்திரிகை சஞ்சிகையின் ஏக விநியோகஸ்தர்

உங்கள் தேவைகள் எதுவானாலும்
தொகையாகவும், சில்லறையாகவும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள,

வீரசிங்கம் ஸ்ரோர்ஸ்
4, கடற்கரை வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

ரூபேஸ் காட்வெயார்ஸ்
இல: 843 கடற்கரை வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

NAAN' Psychology - Magazine

O. M. I. Seminary Colombuthurai

FUL-VUE

**See good and look better!**

opticians & dental technicians.

80, CLOCK TOWER ROAD,

OPPOSIT WELLINGTON THEATRE

JAFFNA



MORAIS

மணி ஓசை அச்சகம் யாழ்ப்பாணம்.